விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk






சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 19 வியாழக்கிழமை (05.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

டெங்கு நோயினை கட்டுப்படுத்த

## யாழிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துக

### யாழ் மாவட்ட அரச அதிபர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு யாழ். மாவட்ட அரச அதிபர்நா.வேதநாயகன் உத்தரவிட்டுள்ளார். இதற்கான அறிவித்தலை ஒவ்வொரு பிரதேச செயலருக்கும் நேற்று 23

கோட்டாவை கொல்லச்சதி

## பயங்கரவாத சட்டத்தில் ஒருவர் கைதாகி விசாரணையில்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவையோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் ஒருவரையோ கொலை செய்ய திட்டமிட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 72 மணித்தியாலம் தடுத்து வைத்து விசாரணைக் குட்படுத்த மினுவாங்கொடை நீதிமன்ற நீதி வான் கேசர சீ.ஏ.சமரதிவாகர 23

# யாழில் இளைஞன் வெட்டிப் படுகொலை



## பட்டப் பகலில் கோரம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். யாழில் பட்டப்பகலில் மேற்படி கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு ஆளுநராக அநுராதா நியமனம்

வடக்குக்கு மட்டும் இல்லை



23

## யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நாளை 6ஆம் திகதி மற்றும் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் 23

தமிழரை தாருங்கள்

## வடக்கு ஆளுநராக நியமிக்கின்றேன்

### அமைச்சரவையில் கோட்டா

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிக்க நான் தயாராக இருக்கிறேன். அமைச்சர்களே சிறந்த ஒருவரை என்னிடம் பரிந்துரை செய்யுங்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநரை நியமிப்பதில் இழுபறி நிலை நீடிக்கிறது. தமது வெற்றிக்கு ஒத்துழைத்தவர்களுக்கு ஏனைய 8 மாகாணங்களுக்கும் நியமித்த ஜனாதிபதி, வடக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிப்பதில் நீண்ட இழுபறியில் உள்ளார். (ம-3)

## ஏப்ரல் 25,27,28 திகதிகளில் பொதுத் தேர்தல் நடத்தலாம்

### தேர்தல் ஆணைக்குழு பரிந்துரை

(கொழும்பு)

மார்ச் மாத தொடக்கத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் ஏப்ரல் 25, 27 அல்லது 28 ஆம் திகதிகளில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் இடையே நேற்று புதன்கிழமை இடம் 23

## சர்வதேசத்துடன் அரசின் முரண்பாடு இலங்கை தனிமைப்படும் நிலை

### முஜிபூர் ரஹுமான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச நாடுகளுடன் தற்போதைய அரசாங்கத்தின் முரண்பாடுகளினால் மீண்டும் நாடு தனிமைப்படும் சூழ்நிலைகளே காணப்படுகின்றது. சுவிஸ் தூதரக பெண் அதிகாரி கடத்தல் விவகாரத்தில் இடைக்கால அரசாங்கம் பொறுப்பற்ற விதமாகவே செயற்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹுமான் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை காரியாலய 23

## தூதரக பணியாளரை மருத்துவ சிகிச்சைக்காக இலங்கைக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டும்

### சுவிஸ் அரசு வேண்டுகோள்; இலங்கை அரசு மறுப்பு

(கொழும்பு)

இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் சுவிஸ்தூதரக பணியாளரை மருத்துவசிகிச்சைக்காக இலங்கையிலிருந்து சுவிஸிற்கு கொண்டு செல்வதற்கு சுவிட்சர்லாந்து தூதரகம் அனுமதி கோரியதாகவும் அதனை மறுத்துவிட்டதாகவும் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட பெண் பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளிக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பெண்ணை மருத்துவ சிகிச்சைக்காக அவரது குடும்பத்தினருடன் இலங்கையிலி 23

வடக்கில் இடியுடன் மழை பெய்யும்

## ஏழு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு அண்மையாக (இலங்கைக்கு தெற்காக) விருத்தியடைந்த குறைந்த மட்ட வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தற்போது 23

## கிணற்றில் தவறி விழுந்த 5 வயது சிறுவன் உயிரிழப்பு

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் தவறுதலாக கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார். அராலி கிழக்கு வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. 23

# மணல், கிரவலை ஏற்றிச் செல்ல அனுமதிப்பத்திரம் இரத்து

(கொழும்பு)

மணல், கிரவல் உள்ளிட்ட கனிய வளங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் நடைமுறை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் ரத்துச் செய்வதாக அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இதன்மூலம் இன்று (நேற்று) முதல் யாரும் மணல், கிரவல் உள்ளிட்ட கனிய வளங்களை ஏற்றிச் செல்ல முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மணல் உள்ளிட்ட கனிய வளங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் எடுக்கவேண்டும் என்ற நடைமுறை தற்போது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## சேவைநலன் பாராட்டு



இன்று 05.12.2019 யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையில் நடைபெறும் **"கூட்டுறவு பணியாளர் கௌரவிப்பு"** விழாவில் கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்க பணியாளர்

எமது பாசமிகு தந்தை

**திரு.சிவகுரு சிதம்பரநாதன்**

கௌரவிப்பினை பெற்றுக் கொள்கிறார்.

அன்போடும் பண்போடும் – எமை
ஆசையோடு வளர்த்தெடுத்த தந்தையே
இன்பம் துன்பம் இரண்டிலும் திளைத்து – நீர்
ஈவு இரக்கமுள்ள சிந்தனையாளனாக
உன்னத சேவை கூட்டுறவு சேவையென்று
ஊரிலுள்ள கூட்டுறவுச் சங்கமதில்
எத்தனை துன்பங்கள் சூழ்ந்திட்டபோதும்
ஏற்றிவிட்ட தீபம் போல் – என்றும்
ஐயமின்றி பொறுமையுடன்
ஒன்றுபட்டு உழைத்து விட்ட உங்களுக்கு
ஓலக்கம் தனில் சேவை வியந்துரைப்பா?
ஔவியம் தவிர்த்து – நீங்கள்
எழுதி வைத்த ஓவியம் போல்
என்றும் ஜொலித்திடவே
சேவையிலே சிறந்து நிற்கும் – எம் தந்தையே
வாழ்க நீர் வளமுடன்
தரணி சிறக்க பரணி பாடும்
பாசக் குழந்தைகளின்
பாராட்டு மடலிது
பற்றுடனே வாழ்த்துகின்றோம்
வாழ்க நீவிர் என்றென்றும்

அன்புடன்
**பிள்ளைகள்**

## சேவைநலன் பாராட்டும் பிறந்ததின வாழ்த்துக்களும்



*திருமதி* **கிருபாலினி அமிர்தகுலசிங்கம்**

இலங்கை ஆசிரியர் சேவை - I

**சேவை விபரம்**

| | |
|---|---|
| 23.03.1990 - 14.02.2010 | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் |
| 15.02.2010 - 04.12.2019 | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை |

அறியாமை வானில் இருளகற்றிய நட்சத்திரப் பறவை
அகவை அறுபது கடந்து அழகு தமிழ் போல்
இளமையுடன் நாளும் இனிமையுடன் வாழ்க

என வாழ்த்தும்

**அன்பு நிறை ஆசிரியர் சகோதரத்துவம்**
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி.

(C-8432)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வெளிவாரிப் பரீட்சைகள்
### கலைமாணி - பகுதி - II - 2016 (இறுதிச் சந்தர்ப்பம்)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைகளுக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், **பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.


மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 27.12.2019 (வெள்ளிக்கிழமை) ஆகும். பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக (www.codl.jfn.ac.lk) அறியத்தரப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
04.12.2019

(C-8428)

## மரண அறிவித்தல்



பிறப்பு 15 - 06 - 1945

இறப்பு 02 - 12 - 2019

### டானியல் முருகேசு வேதாபரணம்

**(ஓய்வுநிலை கிராம அலுவலர், வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர், யா/ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவ சங்கத் தலைவர், பருத்தித்துறை Y.M.C.A செயலாளர்)**

யாழ்.கரவெட்டி மலர்வாசத்தினைப் பிறப்பிடமாகவும் வதிரி புனிதத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் முருகேசு வேதாபரணம் அவர்கள் 02.12.2019 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - நகுலாம்புசம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும் கேசவன், கௌசல்யா, கௌசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கீற்றா, பிரதாபன், சரிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வேதநாயகம், வேதாரணியம் மற்றும் கற்பநாயகம், காலஞ்சென்ற விபுலானந்தன், வித்தியாதரன், அருந்தவமலர், காலஞ்சென்ற தேவநாயகம், தேவாபரணம், தேவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இருதயமலர், றஞ்சிதமலர், அமரதாசன், அனிற்றா பேர்லி, ஸ்ரலா புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனுஷ், அக்ஷை, பிரதோஷ், பிரணவி, தன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 08.12.2019 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் வதிரி புனிதத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து வதிரி பொம்பேர்ஸ் மைதானத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் ஆலங்கட்டை சேமக்காலையில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரி.
தொடர்புகளுக்கு: +94774330520

(C-8430)

தகவல்:-
குடும்பத்தினர்

# தமிழ்க் கூட்டமைப்புக்கு மாற்று அணி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டவட்டம்



**(யாழ்ப்பாணம்)**

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி என்றால் அது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான். நேற்றுவரை கொள்கை ரீதியாக எத்தகைய கருத்துக்களையும் கூறாதவர்கள் இன்று அவ்வாறு கூறுவதற்கான காரணம் என்ன என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் பேர்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நேற்றுவரை இருந்துவிட்டு இன்று மாற்று அணியைத் தேடுகின்றவர்கள் ஒன்று சேரும் இடம் இன்னும் ஒரு அணியாகத் தான் இருக்குமே தவிர அது மாற்று அணியாக இருக்காது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி என்றால் அது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான்.

நேற்றுவரைக்கும் கொள்கை ரீதியாக எத்தகைய கருத்துக்களையும் கூறாதவர்கள் இன்று அவ்வாறு கூறுவதற்கான காரணம் என்ன? எத்தனையோ முக்கியமான பல நிகழ்வுகள் இடம்பெற்றபோது கொள்கை ரீதியாக பேசாதவர்கள் தற்போது பேசுவது ஏன்? எங்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பதவிகள், சலுகைகள் எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு அவர்களை வெளியேற்றப் போகிறார்கள். அல்லது பதவிக்காலம் முடிகின்ற தறுவாயில் வேறு வழியைத் தேடுவதற்காக எடுக்கும் முடிவுகள் மாற்று அணியாக இருக்கப்போவதில்லை.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியால் ஆறு கட்சிகளின் கூட்டு முயற்சி ஒன்று இடம்பெற்றது. இதன்போது 13 கோட்பாடுகள் தயாரிக்கப்பட்டன. இதில் நாங்கள் தான் கூடுதல் பங்களிப்பை வழங்கினோம். அதில் முதல் ஒன்று, இரண்டு, மூன்றை எடுத்துக்கொண்டால் தமிழர் தேசியம் தங்களுக்கு என்று ஒரு இறைமை இருக்கின்றது.

ஒற்றையாட்சியை நிராகரிக்கின்றோம். சுயநிர்ணய அடிப்படையில் தான் சமஷ்டியை ஏற்றுக் கொள்வோம் எனப் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. கொள்கை ரீதியாக இத்தகைய கருத்துக்களைக் கூறிக்கொண்டு அதற்கு நேர்மையாக இருக்கப்போகிறீர்கள் என்றால் அதனை அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இருக்கக்கூடிய இடம் பாராளுமன்றத்தில் இருக்கக் கூடிய அரசியல் அமைப்புச் சபை அந்த அரசியல் அமைப்புச் சபை கடந்த நான்கரை வருடமாக இயங்கி ஒரு இடைக்கால அறிக்கையை தயாரித்துள்ளது.

ஆறு கட்சிகள் இணைந்து தயாரித்த 13 கோரிக்கைகளை அடியோடு நிராகரித்து அதற்கு நேர்மாறாகத்தான் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. கொள்கையில் இணங்குவது என்பது ஒன்று, அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய இடத்தில் சரியான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் முக்கியம்.

அந்த இடத்தில் ஒரு பிழையான காரியம் இடம்பெற்றுள்ள நிலையில் அதனை நிராகரித்து இந்த 13 கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற புது முயற்சியைத் தான் செய்திருக்க வேண்டும். அதனைச் செய்யாது ஏனைய ஐந்து கட்சிகளும் அந்தக் கோட்பாட்டை நிராகரித்தன.

குறித்த பேச்சுவார்த்தையில் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொள்வதற்கு முன்னர் அரசியல் அமைப்பு சபையில் வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை செத்து விட்டது என்றும் இனி அது மீள எடுக்கப்படப்போவதில்லை எனக் கூறினார்கள். சுமந்திரன் கலந்து கொண்டபோது இடைக்கால அறிக்கை செத்துப்போகவில்லை. அதனைத்தான் நாங்கள் முன்கொண்டு செல்லப்போகின்றோம். அதுதான் எங்கள் தேர்தலுக்கான அணுகுமுறையாக இருக்கப்போகின்றது.

அதன்போதும் நாங்கள் தெளிவாகக்கூறுகின்றோம் இதனை நிராகரிக்க வேண்டும். இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சி என்பதை நான்கு கட்சிகளும் கூறியதுடன் மக்களுக்கும் அதனைக் கூறியுள்ளார்கள். நாங்களும் அதனைக் கூறி நிராகரிக்க வேண்டும் என்று கூறுகின்றோம். அப்படியாயின் நான்கு கட்சிகளும் நாங்கள் சொல்லும் கருத்துடன் இணங்கியிருக்க வேண்டுமே தவிர எவ்வாறு சுமந்திரனுடன் இணைய முடியும்.

சுமந்திரன் குறித்த கூட்டத்தில் கலந்துகொண்டு இதைத் தான் நடைமுறைப்படுத்தப்போறோம் என்று கூறிய பின்னரும் அவர்கள் அந்த முடிவை எடுக்கிறார்கள் என்றால் மக்களுக்கு ஒரு கதை உள்ளே முக்கியமான இடங்களில் ஒரே நிகழ்ச்சி நிரலில் தான் இயங்குகின்றார்கள். ஆகவே மாற்றாக இருக்கக்கூடியது நாங்கள் மட்டும்தான். ஏனைய தரப்புக்கள் ஒன்றுசேர்ந்தாலும் நாங்கள் ஆச்சரியத்தக்க விடயமாக இருக்காது.

கொள்கை ரீதியாக எத்தகைய வேறுபாடும் இல்லை. அந்த மாற்று அணி நாங்களாக இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு போலி மாற்றை உருவாக்கி எங்களை மூன்றாம், நான்காம் தரப்பாகத் தள்ளப்பார்க்கும் முயற்சியாக நாங்கள் இதனைப் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சொய்சா எம்.பி.காலமானார்



(சிங்கப்பூர்சிற்றி)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தனது 57 ஆவது வயதில் நேற்றுக் காலை காலமானார்.

சிங்கப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் காலமானார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக ரஞ்ஜித் சொய்சா தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்துவது தொடர்பில் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்



(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை இலங்கையிடம் ஒப்படைப்பது தொடர்பாக சிங்கப்பூர் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாக நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட பிணை முறிகள் விற்பனையில் 10 பில்லியன் ரூபாய் மோசடி இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்குத் தொடரப்பட்டதுடன், பிரதான சந்தேக நபராக அடையாளப்படுத்தப்பட்ட முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக கடந்த ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

முன்னதாக, இந்த ஆண்டு ஜுன் மாதம் மத்திய வங்கி கருவூல பத்திர மோசடி தொடர்பாக சட்டமா அதிபர், அர்ஜுன மகேந்திரன் மற்றும் 9 பேருக்கு எதிராக நிரந்தர மேல் நீதிமன்ற விசாரணைக்கு முன் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தார்.

இதன் பின்னர் ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவரை ஜுலை 19 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக்கும் வகையில் பிடியாணை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## காபன் பரிசோதனை கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

நிதியமைச்சு இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது.

காபன் பரிசோதனைக் கட்டணம் குறைப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலையும் நிதியமைச்சு வெளியிட்டது.

வற்வரி குறைக்கப்பட்டமை காரணமாகவே இவ்வாறு மோட்டார் வாகனப் புகைப் பரிசோதனைக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அண்மையில் புதிய வரித் திருத்தங்களை அரசாங்கம் அறிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தெற்காசிய விளையாட்டுப் போட்டி

# சண்முகேஸ்வரன், சாரங்கி, அஞ்சனி பதக்கம் வென்று அசத்தல்




நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் 13ஆவது தெற்காசிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்தார் குமார் சண்முகேஸ்வரன்.

10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை வீரர் குமார் சண்முகேஸ்வரன் கலந்துகொண்டார். தான் பங்கேற்ற முதலாவது சர்வதேச போட்டியிலேயே பதக்கம் வென்று சாதித்துள்ளார்.


பந்தயத் தூரத்தை 30 நிமிடம் 49.20 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இதில் தங்கத்தை இந்தியாவும், வெண்கலத்தை நேபாளமும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பெண்களுக்கான நீளம் பாய்தலில் இலங்கைக்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்துள்ளன.


பெண்களுக்கான நீளம்பாய்தலில் 6.38 மீற்றர் தாண்டிய சாரங்கி சில்வா தங்கத்தையும், வெள்ளிப் பதக்கத்தை 6.11 நீளம் பாய்தலில் அஞ்சனி புலவன்ஸ வென்றார்.

வெண்கலப் பதக்கத்தை இந்திய வீராங்கனை சுவீகரித்திருந்தார்.



## ஐசிசி டெஸ்ட் தரவரிசை

# ஸ்மித்தை பின்தள்ளி மீண்டும் முதலிடம் பெற்றார் விராட் கோலி



ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் விராட் கோலி முதல் இடத்தில் இருந்தார். ஓராண்டு தடைக்குப்பின் டெஸ்ட் போட்டியில் களம் இறங்கிய அவுஸ்திரேலியா பட்ஸ் மன் ஸ்டீவ் ஸ்மித் ஆஷஸ் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனால் விராட் கோலியை பின்னுக்குத் தள்ளி முதல் இடம்பிடித்தார். வெஸ்ட் இண்டீஸ் மற்றும் தென்ஆபிரிக்கா தொடரில் விராட் கோலி சிறப்பாக விளையாடாததால் மீண்டும் முதல் இடத்தை பிடிக்க முடியவில்லை.

ஆனால் பங்காளதேஷ் அணிக்கெதிரான ஆட்டத்தில் சதம் அடித்தார். இதனால் ஸ்மித்திற்கும் (131) விராட் கோலிக்கும் (128) இடையில் மூன்று புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் இருந்தது.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஸ்மித் சிறப்பாக விளையாடவில்லை. இதனால் 131 புள்ளிகளில் இருந்து 8 புள்ளிகளை இழந்து 123 புள்ளிகள் பெற்றார். விராட் கோலி 128 புள்ளிகளில் இருந்ததால் மீண்டும் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக முச்சதம் அடித்த டேவிட் வார்னர் 12 இடங்கள் முன்னேறி 5-வது இடத்தை பிடித்துள்ளார். கேன் வில்லியம்சன் 877 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் உள்ளார். அதேபோல் புஜாரா 791 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் உள்ளார். ரகானே 759 புள்ளிகளுடன் 6-வது இடத்திற்கு சரிந்துள்ளார். ஜோ ரூட் 4-வது இடங்கள் முன்னேறி 7-வது இடத்தை பிடித்துள்ளார்.

# "கிரிக்கெட்டின் மன உறுதி" விருது பெற்ற நியூசிலாந்து

2019 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் விளையாடிய நியூசிலாந்து அணியின் தன்னம்பிக்கையான அணுகு முறையை பாராட்டி 'ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்' விருது வழங்கப்பட்டுள்ளது.

உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் விளையாடிய நியூசிலாந்து அணியின் திடமான மனப்பாங்கை பாராட்டி அந்த அணிக்கு இவ்வாண்டின் கிரிக்கெட்டின் மன உறுதி (ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட்) எனும் சிறப்பு விருதை லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மேரிலிபோன் கிரிக்கெட் கிளப் வழங்கி கௌரவித்துள்ளது.

'உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் நியூசிலாந்து அணியின் விளையாட்டுத் திறன், பணிவு மற்றும் தன்னலமைற்ற தன்மை ஆகியவை வெளிப்பட்டது. அந்த அணியின் வீரர்கள் இவ்விருதிற்கு தகுதியானவர்கள்' என மேரிலிபோன் கிரிக்கெட் கிளப்பின் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

# 2019ஆம் ஆண்டிற்கான சிறந்த இலங்கையர் என்ற விருதினைப் பெற்றார் சங்கக்கார



முன்னோடி வணிக இதழ் எல்எம்டி தனது 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த இலங்கையர் விருதை முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவுக்கு அறிவித்துள்ளது.

சங்கக்கார உலகின் எந்தப் பகுதியிலும் சொற்பொழிவு ஆற்றிய ஒரு சில இலங்கையர்களில் ஒருவர் என எல்எம்டி தெரிவித்துள்ளது.

இலங்கையின் பீமன்யா லட்சுமன் கதிர்காமருக்கு பிறகு வருடாந்த விருதை இரண்டு முறை வென்ற இரண்டாவது இலங்கையர் சங்கக்கார என்று குறிப்பிட்டுள்ளது.


மேரிலேபோன் கிரிக்கெட் கிளப்பின் (எம்.சி.சி) தலைவர் பதவிக்கு முதல் வெளிநாட்டவராக சங்கக்கார நியமிக்கப்பட்டதை கௌரவிக்கும் வகையில் அவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குமார் சங்கக்கார இலங்கையின் முன்னணிநற்பெயரை உருவாக்குபவர் அல்லது பிராண்ட் தூதர் என்ற கிரீடத்தை ஒரு தசாப்தத்திற்கும் மேலாக அணிந்துள்ளார், மேலும் இலங்கையர்களுக்கு அனைத்து தரப்பு, அனைத்து இனங்கள், அனைத்து நம்பிக்கைகள் மற்றும் பலவற்றிலிருந்து ஊக்கமளித்துள்ளார்.

2019 சிறந்த இலங்கையராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சங்கக்கார, உலகளவில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும், சிலர் செய்ததைப் போல தனது நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். தாய் நாட்டிற்கு இன்னும்நற்பெயரையும் வலிமையும் அவர் சேர்க்க வேண்டும் என எல்எம்டி தெரிவித்துள்ளது.

## இலங்கை கிரிக்கெட் அணியின்

# புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமனம் பெற்றார் மிக்கி ஆர்தர்



இலங்கை ஆண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப்பயிற்றுவிப்பாளராக மிக்கி ஆர்தர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தை இலங்கைக் கிரிக்கெட் சபை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தென்னாபிரிக்காவை சேர்ந்தவரான மிக்கி ஆர்தர் இறுதியாக பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டதுடன், அதற்கு முன்பு தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளின் பயிற்சியாளராகவும் கடமை புரிந்திருக்கின்றார்.

இதேவேளை, இலங்கை அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக கிராண்ட் பிளவரும், பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக டேவிட் சாகரும், களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக ஷான் மக்டெர் மொட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இரண்டு வருட ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி அஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த 8 வருடத்தில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு நியமிக்கப்பட்ட 11 ஆவது தலைமைப் பயிற்றுவிப்பாளராக மிக்கி ஆர்தர் விளங்குகின்றார். அதுமட்டுமல்லாது அவரது தலைமைப் பயிற்சியில் பாகிஸ்தானை இலங்கை அணி அணி எதிர்கொள்ளவுள்ளமை மற்றுமொரு சவாலாகும்.

எனவே, இலங்கை அணியின் தலைமைப்பயிற்றுவிப்பாளராக பதவியேற்கும்போதே பல்வேறு சவால்களுடனும், அழுத் தங்களுடனும் மிக்கி ஆர்தர் பொறுப்பேற்கின்றார்.

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அடைந்த தோல்வியை அடுத்தே மிக்கி ஆர்தர் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். ஆனாலும், அவரது பயிற்சியின் கீழ் கடந்த 2017 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ணத்தை பாகிஸ்தான் சுவீகரித்ததுடன், ருவென்டி 20 அணிகளின் தரப்படுத்தலிலும் பாகிஸ்தான் முதலிடத்தைப் பெற்றது.

# மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள்



மயில்வாகனம் கமலகாந்தன் (ஆதிபர்)



சிவானந்தராசா சுகந்தினி (ஆசிரியர்)



சிவகணேசன் அனுஷலா (ஆசிரியர்)



பரமேஸ்வரன் மஞ்சுளா (ஆசிரியர்)



சு.குவின்ராஜ் 188



கெ.ரஜீவனா 179



ம.மகிழினி 178



கெ.அர்ச்சுனேஸ் 175



து.ஜிலுக்சன் 173



அ.சுபலக்சன் 170



தெ.ஹஸ்வின் 169



ச.கயானா 169



க.கயலக்சன் 168



ஜெ.நிலுயன் 167



வி.அவினுஷ் 167



ம.பிரசன்னா 165



அ.டக்சகி 163



ம.சயுமினா 162



பி.அக்சயன் 160



ஜெ.கேனுஜன் 159



ம.மதுசன் 159



க.புவிதரன் 158



நி.அபிஷாளினி 156



ர.தனுஸ்கா 156



ச.றதிபன் 154

## 100-152 புள்ளிகள் பெற்ற மாணவர்கள்

க.திவ்யா-150, தெ.சார்கவி-150, ப.கிஷாந்தன்-149,
ஜெ..கிசோபன்-149, சி.நிசானி-149, ஜெ.அனோசிகன்-148,
ம.சஹானி-148, க.கவிப்பிரியன் -145, சி.அபிக்ஷா-144,
கா.சரண்யா-141, ச.சங்கீதப்பிரியன்-138, ச.சயன்-135,
சா.லக்ஷிகா-135, ய.சயானா-133, சி.அபிஷாந்-132,
ர.அக்ஷயா-128, க.அபிலாஸ்-127, பு.சிந்துஜா-125,
ரா.நிபிஷன்-124, வி.சர்மினி-122, ஜெ.டேனுஜன்-112,
டெ.டெனுக்ஷா-112, ர.திவ்யா-110, லே.டிலானி-109,
ஞா.அபிராமி-108, அ.புவிகன்-107, ர.அனுசுயன்-101.

## 70-100 புள்ளிகள் பெற்ற மாணவர்கள்

கி.கிந்துஜா-98, ச.மதுசா-94, சி.சங்கவி-89,
ச.கவியாழினி-88, ர.பி.தனுசன்-87, டெனுக்ஷா-85,
ப.கபிஷாந்-82, வி.கோபிசன்-78, ற.கிருத்திக்-75,
யோ.கிரிசாளினி-71, கி.டிலான் 70, சு.கார்த்தீபன்-81

Congratulations

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம்.


# முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த கலைவிழா

(யாழ்ப்பாணம்)

ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்துடன் இணைந்து இயங்கும் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த கலைவிழா நாளை மறுதினம் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஆறுகால் மடம் அறிவொளி கலையரங்கில் சனசமூக நிலையத் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை அதிபர் கு.அகிலன், நீர்ப்பாசன மற்றும் கிராமிய வளர்ச்சி அமைச்சின் சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் க.கபிலன், யாழ். மாநகர சபை 10 ஆம் வட்டார உறுப்பினர் எம்.எம்.எம்.நிபாஹிர், ஜே/88 புதிய சோனக தெரு கிராம உத்தியோகத்தர் ஜெ.சுதர்சன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. த.சுபைதா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சு.ஜெயகலா, யாழ். கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஜெகதாரணி கிரிதர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

வரணி-மாசேரியைச் சேர்ந்த க.விஜயகாந்தன் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கம், மாசேரி சனசமூக நிலையம், மாசேரி சிவில் பாதுகாப்புக்குழு மற்றும் மாசேரி வீட்டுத் திட்டக் குழு ஆகியவற்றின் தலைவரும் வரணி பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளராகவும் பதவி வகித்து வருகிறார். (இ-30-103)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் மரம், செடி, கொடிகள் வந்தால்

துளசிச் செடியைக் கனவில் கண்டால் காரியங்கள் வெற்றி பெறும். புத்திர பாக்கியம் ஏற்படும்.

சந்தன மரத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். உறவினர் உதவியால் மேன்மையடைவர். தொழிலில் இலாபம் உண்டாகும்.

பழச்செடிகளையோ, அல்லது பழுத்துக் குலுங்கும் மரங்களையோ கனவில் கண்டால் பொருள் சேரும். புத்திர பாக்கியம் ஏற்படும். அதிலுள்ள பழங்களைப் பறிப்பதாகக் கனவு கண்டாலும் நல்லது நடக்கும்.

பழங்களைத் தனக்கு ஒருவர் கொடுப்பதாகவோ அல்லது தான் உண்பதாகவோ கனவு கண்டால் செய்யும் காரியம் வெற்றி பெறும்.

ஆலமரத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் மேன்மை உண்டாகும். உறவினர்களால் மகிழ்ச்சியும், பொருள் இலாபமும் ஏற்படும்.

பூக்கள் நிறைந்த செடிகளைக் கனவில் கண்டால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி உண்டாகும். காய்கள் நிறைந்த செடிகளைக் கனவில் கண்டால் காரியத் தடையும் பொருள் விரயமும் ஏற்படும்.

துவரையைக் கனவில் கண்டால் பொருள் வரவு ஏற்படும். நோய்கள் குணமாகும்.

அரச மரத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தீரும். பொருள் இலாபமும் புத்திர பாக்கியமும் ஏற்படும். அரச மரத்தை வலம் வருவதாகக் கனவு கண்டாலும் இதே பலன்கள் ஏற்படும்.

கரும்புத் தோட்டத்தைக் கனவில் கண்டால் எதிர்காலம் இனிமையாக இருக்கும்.

கரும்பைத் தின்பது போலக் கனவு கண்டால் உங்களுடைய உழைப்புக்கு விரைவில் ஊதியம் கிடைக்கும். கரும்பு ஆலையைக் கனவில் கண்டால் குடும்பச் சுமை அதிகரிக்கும்.

முற்றிய நெற்கதிர்களைக் கனவில் கண்டால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். நெற்கதிரை அறுவடை செய்வது போலக் கனவு கண்டால் உங்களுடைய பணக்கார உறவினர் ஒருவர் விரைவில் மரணமடைவார். அவருடைய சொத்துக்கள் உங்களுக்கு வந்து சேரும்.

மரத்தை அறுப்பது போலக் கனவு கண்டால் தொழில் தொடங்குவதற்காகச் சொத்தை விற்கும் நிலை ஏற்படும். குடும்பத்தில் பாகப்பிரிவினை நடக்கும். வாழை மரத்தைக் கனவில் கண்டால் தரித்திரம் ஏற்படும்.




நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா 30.11.2019 சனிக்கிழமை அதிபர் திருமதி விஜயகுமாரி சிறீபாஸ்கரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வர்த்தக பாட ஆசிரியர் திருமதி ம.இராஜேந்திரா, அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இராசி பலன்

**05.12.2019**

கார்த்திகை 19, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

நவமி பின்னிரவு 4.46 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 9.09 மணிவரை

சுபநேரம் 7.46-9.16 மணிவரை

இராகுகாலம் 1.46-3.16 மணிவரை

வளவன்

கிரகநிலை: ராகு; சந்; சனி,கேது குரு,சுக்; சூரி, புத; செவ்

சந்திராஷ்டமம்: ஆயிலியம், மகம்

**மேடம்** தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய முயற்சிகள் கைகூடும், பேச்சைக் குறைத்துச் செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு. வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் நாடி வரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், தலைமைப் பதவிகள் உங்களை நாடி வரலாம்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த வேலைகள் தீரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

# மணிவிழா வாழ்த்து

## அதிபரின் வாழ்த்துரை

இன்று மணிவிழாக் காணும் எமது கல்லூரியின் நாயகி செல்வி சிவலீலாதேவி வடிவேலு அவர்களின் சேவையை வாழ்த்த வார்த்தைகள் இல்லை. தன்னலம் கருதாத்தலைவி. தன் உடல் உழைப்பை எல்லாம் கல்லூரிக்காக கொடுத்த உத்தமி. கல்லூரியில் ஏற்படும் இன்னல்கள் களைந்து இடர்படுவோரை இனிய பதில் கூறி வழி அனுப்பும் இன்முகத்தாய். வாழ்வில் கல்லூரியின் சேவையே தன் வாழ்வாக எண்ணி அல்லும் பகலும் அயராது உழைத்த பெருந்தகை. இவர் இக் கல்லூரியின் பழைய மாணவியாக மட்டுமன்றி ஆசிரியராக, பதில் அதிபராக, பின் பிரதி அதிபர் எனப் பல வடிவிலும் தன்னை அர்ப்பணித்து சேவையின் ஆரம்பம் முதல் கொண்டு இறுதி நாளாகிய இன்று வரை இக்கல்லூரியிலே தனது கடமைகளைச் செவ்வனே ஆற்றி ஓய்வு பெறும் பிரதி அதிபர், செல்வி சிவலீலாதேவி வடிவேலு அவர்கள் சோமாஸ்கந்தனின் அருளும் பொருளும் பெற்று நோய் நொடி இன்றி இவ் உலகில் நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு.செ. இளங்கோ**
**அதிபர்,**
**யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**

## பழைய மாணவர் சங்க செயலாளர் க.இராஜதுரை அவர்களின் உள்ளத்திலிருந்து

எமது பாடசாலையின் பழைய மாணவியும் பிரதிய திபரும் எமது சங்க செயற்குழு உறுப்பினருமாகிய செல்வி சிவலீலாதேவி அவர்கள் ஆசிரிய சேவையிலிருந்து 05.12.2019 இன்று ஓய்வு பெறுகிறார். அவர் ஆசிரிய நியமன்ம் கிடைத்ததிலிருந்து எமது பாடசாலையில் உயர்தர வகுப்புக்கு அளவையியல் பாடத்தை திறம்பட போதித்து பல மாணவர்கள் அந்தப்பாடத்தில் திறமை சித்தி பெற வைத்து மட்டுமல்லாது பாடசாலையின் உயர்தர பரீட்சையின் சித்தி வீதத்தை அதிகரிக்க உதவினார். அவரிடம் கற்ற பல கலைப்பிரிவு மாணவர்கள் இன்று நல்ல நிலையில் இருப்பது அவரின்தன்னிகரற்ற சேவைக்கு கிடைத்த சான்று.

செல்வி சிவலீலாதேவி அவர்கள் ஆசிரியப் பணியில் மட்டுமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றினார். எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து பணியாற்றிய சகல அதிபர்களின் நிர்வாகத்திற்கு பழைய மாணவியாக, ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக பங்காற்றினார். பழைய மாணவர் சங்கம்போன்ற பாடசாலையின் வளர்ச்சிக்காக இயங்கும் அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டு அந்த அமைப்புக்கள்மூலமாக கல்லூரிக்கு தேவையானவற்றை பெற்றுக்கொடுக்க முன்னின்று உழைத்தார்.

செல்வி சிவலீலாதேவி அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்கவும் ஓய்வுக்காலத்திலும் தன்னாலான சேவையை எமது பாடசாலைக்கு ஆற்றுவதற்குமான தேக ஆரோக்கியத்தை கொடுக்கவும் எல்லாம் வல்ல சோமாஸ்கந்த பெருமானை வேண்டுகின்றேன்.

**க.இராஜதுரை, செயலாளர்/ப.மா.ச.**



**செல்வி.வடிவேலு சிவலீலாதேவி (S.L.T.S.I)**
**(B.A, MA, PGDE)**
**பிரதி அதிபர்,**
**யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**

**சேவை விபரம்**

**முதல் நியமனம் 17.08.1988**
**பகுதித்தலைவர் 1998-2008**
**பதில் அதிபர் 2009.01.01-2009.09.08**
**பிரதி அதிபர் 2009.09.09-2019.12.05**

பத்து ஊரு மழலைகளும் வித்துவங்கள் கற்றுயர
புத்தூர் பதியின் மத்தியில் பூத்த கல்லூரியில்
நித்தியமும் நீண்ட பணி ஆற்றிய பெருந்தகையை
இன் சொல்லில் வாழ்ந்த இன்பத்தில் ஆழ்த்த-எம்
இதயத்தில் பூத்த பாமாலை அன்பை அள்ளி வரும் இவ்வோலை

நெஞ்சுறுதியும் நேர்மையும் தருக்கவியல் செம்மையும்
மெய்யியல் வன்மையும் கைவரப் பெற்றவர்
யாழ்.பல்கலையில் பல கல்வி கற்றவ்ர்
ஆற்றிய பணிக்காலம் ஆண்டு முப்பத்தொன்று
விழுது பரப்பிய ஆலமரம் என்று போற்றுதல் நன்று

வருவார் பாடசாலைக்கு காலை வேளைக்கு
வரையறை இல்லை கடிதம் எழுதும் வேலைக்கு
முதல்வரின் பணி முழுவதையும் முறையாய் சரி பார்த்தவர்
புத்தூர் வள்ளல் மழவராயர் குலத்தில் பூத்தவர்
எத்தூருக்கும் போகாமல் கல்லூரியை கட்டிக் காத்தவர்

தாயின் அரவணைப்பு தன் பணியில் அர்ப்பணிப்பு
வரு பகை குளிர்விக்கும் நகைப்பும் ஓர் சிறப்பு
பகலிரவு பாராது நேர காலத்திற்கு வீடு சேராது
அக மகிழ்வோடு அலுவலகக் கடமை ஆற்றினார்
எழுத்தாணி பிடிக்க வைத்து மாணவ மணிகளை ஏணியில் ஏற்றினார்

கனத்த இதயம் கண்களிலே நீர்த்துளியின் உதயம்
நாங்கள் நகமும் சதையும் ஆறாம் காப்பியமாகும் உங்கள் கதையும்
என்றும் ஆயுள் குன்றா நினைவுகள் நெஞ்சோடு
வானச் சிகரத்தில் நின்று கானக் குயிலே நீ பாடு
நிலவே நீ வந்து நிதம் அட்சதை போடு

உங்கள் மகத்துவங்கள் ஈடிணையில்லாதது
இன்னும் ஏராளம் உண்டு எழுதுகோல் சொல்லாதது
பணியின் மேன்மை கண்டு அணி செய்தோர் ஆயிரம் உண்டு
கற்கண்டு கலந்த சொற்கொண்டு வாழ்த்த வந்தோம்
வாழிய பல்லாண்டு! வாழிய பல்லாண்டு!
நாளையும் நீவீர் எம் நிழல் ஆவீர்.

## கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.நா.சிவநேசன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

செல்வி.சிவலீலாதேவி வடிவேலு (பிரதி அதிபர்) அவர்கள் யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரியின் முதுகெலும்பாக செயற்பட்டு சேவையாற்றியவர். 1988 இல் ஆசிரியர் சேவையினை ஆரம்பித்து 1998 இல் பகுதித்தலைவராகவும் 01.01.2009 தொடக்கம் 08.09.2009 வரை பதில் அதிபராகவும் 09.09.2009 தொடக்கம் இன்றுவரை (05.12.2019) பிரதி அதிபராகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெறுகிறார்.

பாடசாலையின் சகல தகவல்களையும் தன்னகத்தே வைத்திருந்து உடனுக்குடன் வெளிப்படுத்துவதில் சாமர்த்தியம் மிக்கவர். இப்பாடசாலையில் மாணவியாக கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி பட்டதாரியாகி தான்கற்ற பாடசாலையிலேயே ஆசிரியப் பணியை தொடங்கி ஓய்வுபெறும் வரை அதே பாடசாலையில் கற்பித்த பெருமைக்குரியவர். எனவே இவருடைய வயதில் 55 வருடங்கள் இப்பாடசாலையுடன் சங்கமித்துள்ளர்.

இவர் மென்மையான சுபாவமுடையவர். நேர்மையானவர். எதையும் உடனுக்குடன் விருப்பத்துடன் செய்து முடிக்கும் ஆற்றல் மிக்கவர். பாடசாலையின் ஸ்தாபகர் திருவாளர் மழவராயர் அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர். பாடசாலையின் தர்மகர்த்தா சபையிலும் பழைய மாணவர் சங்கத்திலும் தொடர்ச்சியாக இருந்து செயற்பட்டு வருகின்றார்.

பாடசாலையில் அனைவருடனும் சுமுகமாகப் பழகி பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முன்னிலையாகச் செயற்படுவர். இவரின் ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துவதோடு தொடர்ந்தும் இவரது சேவை பாடசாலைக்கு கிடைக்கவும் சகல நலன்களோடும் ஓய்வுக்காலத்தை பூரண ஆரோக்கியத்துடன் கழிக்கவும் எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

**நா.சிவநேசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம்,கோப்பாய்.**

## ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் வாழ்த்து

**தக்கார் தகவிலர் என்பது**
**அவரவர் எச்சத்தால் காணப்படும்**

நல் ஆசிரியர் ஒருவருடைய எச்சம் என்பது அவர் உருவாக்கிய மாணவர்களே. அந்த வகையில் எமது கல்லூரியில் 1988ஆம் ஆண்டு ஆசிரியராகப் பதவியேற்று நல் ஆசிரியர், பகுதித்தலைவர், பதில் அதிபர், பிரதி அதிபர் எனப் பல பதவிகளை அலங்கரித்து முப்பது வருடங்களுக்கு மேலாக சேவை புரிந்து புத்தூரை மையமாகக் கொண்ட அயற்கிராமங்களில் நன் மாணவர்கள் பலரை உருவாக்கிய எமது கல்லூரியின் பழைய மாணவியும், அன்பும் நற்பண்புகளும் மிக்க எமது பிரதி அதிபர் செல்வி சிவலீலாதேவி அவர்கள் 05.12.2019 இன்று மணிவிழாக் கண்டு தனது அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்றார்கள்.

அவர்களின் ஓய்வுக்காலம் நீண்ட புகழோடும் நிறைந்த ஆரோக்கியத்தோடும் மகிழ்ச்சி நிறைந்ததாக அமைய எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானுடைய அருளாசியினை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி.**

(C-8425)

# மழலைகள் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

மழலைகள் கலைவிழா-2019 இன்று வியாழக்கிழமை பிற்பகல் விளையாட்டரங்கு வீதியிலுள்ள சரஸ்வதி முன்பள்ளியில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவர் சு.வைகுந்தநாதன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்து கொள்வார்.(இ-7)

# ஜனாதிபதி செயலக முன்னாள் பிரதானிக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு திகதி அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி பேராசியர் ஐ.எச்.கே.மஹானாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி.திஸாநாயக்க ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான பகுதிகளை (இரும்பு). இந்திய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவது தொடர்பாக அந்நிறுவனத்திடமிருந்து 54 கோடி ரூபாய் இலஞ்சம் கோரியதாகவும் அதற்கான முற்பணமான 2 கோடி ரூபாயை கொழும்பிலுள்ள நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் வைத்து பெற்றுக் கொள்ள முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்டனர்.

குறித்த நபர்களை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி, குறித்த ஹோட்டலின் வாகனத் தரிப்பிடத்தில் வைத்து கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாக கலைவிழாவும் விருந்தினர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் கலாநிதி பா.தனபாலன் தலைமையில் நடைபெற்றது.இதில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அம்பிகைபாகன் கலந்து கொண்டார். (படங்கள்-புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

# பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்க வடக்கில் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)


யாழ்.சமூக செயற்பாட்டு மையம் (JSAC) முன்னெடுத்து வருகின்ற பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாள் விழிப்புணர்வு செயற்பாடுகள் "பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சூழலினை உருவாக்குவோம்" என்னும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனொரு செயற்பாடாக இன்று வியாழக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை வட மாகாணத்தின் அனைத்து பிரதேசங்களிலும் சேவையில் ஈடுபடுகின்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள், தனியார் பேருந்துகள் மற்றும் ஆட்டோக்கள் போன்றவற்றில் விழிப்புணர்வு துண்டறிக்கைகள் ஒட்டப்படவுள்ளன.

அத்துடன், விழிப்புணர்வு துண்டறிக்கைகளும் பொது இடங்களில் வழங்கப்படவுள்ளன.

இதற்கு அனைத்து போக்குவரத்து சங்கங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளன என்று அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது. (இ-7)

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியுடன் ஆனந்த அனுபவப் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜியுடன் இணை நேரடி ஒளிபரப்பினூடாக உலகில் தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் ஆனந்த அனுபவப் பயிற்சி நடைபெறவுள்ளது.

ரவிசங்கர் குரு ஜியுடன் தமிழில் சென்னையிலிருந்து நேரடி ஒளிபரப்பு ஆனந்த அனுபவப் பயிற்சி இம் மாதம் 6,7,8ஆம் திகதிகளில் மாலை 5.30 மணி முதல் இரவு 9 மணிவரை நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகிலுள்ள திவ்ய ஜீவன சங்கத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் சுவாசப் பயிற்சி (பிரணாயாமம், சுதர்சனக் கிரியா) ,யோகா, தியானம் என்பன இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் புதிதாகப் பயில விரும்புவோர் மற்றும் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

இதற்கான பதிவுகள் நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 முதல் 5.15 மணி வரை இடம்பெறும். மேலதிக தகவல்களுக்கு 077 224 7635 என்ற இலக்கத்துடன் தொடர்பை மேற்கொள்ள முடியும் என வாழும் கலை ஆசிரியர் ஜனனி ஸ்ரீபிரசாந் சர்மா அறிவித்துள்ளார். (இ

# அரச அலுவலரை கௌரவிக்கும் விருதுக்கு வாக்களியுங்கள்



(யாழ்ப்பாணம்)


இவ் வருடத்திற்கான நேர்மையான அரச அலுவலரை கௌரவிக்கும் இன்ரகிறிற்றி ஜக்கன்-2019 விருதுக்கான நபரை தேர்வு செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் இருந்து கிடைக்கப் பெற்ற நூற்றுக்கும் அதிகமான விண்ணப்பங்களிலிருந்து 10 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் 5பேர் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி இந்த 5 பேரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எனவே ICON என தட்டச்சு செய்து இடைவெளி விட்டு 5 என்ற இலக்கத்தைப் பதிந்து 011 588 2626 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-7)

## அரியாலை உப்பாறு கடல் நீரேரி திறப்பு
# சிறுவர்கள் நீரோடும் பகுதியில் விளையாடுவதை தவிர்க்கவும்
## பொறியியலாளர் சர்வராஜா வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

அரியாலை உப்பாறு கடல் நீரேரி நேற்றுக் காலை திறக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.சர்வராஜா தெரிவித்தார்.

வடமராட்சி கடல் நீரேரி நீர் மட்டம் அதிகரித்த நிலையில் அரியாலை உப்பாறு கடல் நீரேரி கதவுகள் திறக்கப்பட்டன.

குறித்த நீர்த் தடுப்பணையின் நீர் மட்டம் அதிகரித்த நிலையில் கைதடி,சாவகச்சேரி மற்றும் செம்மணிப் பகுதிகளின் தாழ் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்படும். எனவே வரப் போகும் அனர்த்த நிலையைக் கருத்தில் கொண்டு குறித்த நீர் நிலையின் கதவுகளை திறக்க முடிவு செய்யப்பட்டது.

இந் நிலையில் செம்மணி உப்பளப் பகுதி நீரேரி திறக்கப்பட்டதால் குறித்த நீர் கடலுடன் கலக்கும் பகுதிகளில் சிறுவர்கள் நீரில் விளையாடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ-10)

# மனவளக்கலைப் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனவளக் கலை மன்ற அறக்கட்டளை, யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோயிலின் ஏற்பாட்டில் வட மாகாணத்திலுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்களுக்கு அண்மையில் மனவளக் கலைப் பயிற்சி வழங்கப்பட்டது.

இப் பயிற்சியை இந்தியாவிலிருந்து வருகை தந்த மனவளக் கலை முதுநிலை பேராசிரியர் இந்திரா சண்முக சுந்தரம் மற்றும் பேராசிரியர் ஆ. சுப்பிரமணியம் ஆகியோர் வழங்கினார். (இ-5-7)

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்.மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

இதன் யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம் மற்றும் வல்வெட்டித்துறை தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்கை நெறிகள் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு தை மாதம் 2 ஆம் திகதி முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்பட வுள்ளன. இவை மூன்று, ஆறு மற்றும் ஒரு வருடம் பயிற்சிக் காலத்தை கொண்டது.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக் கற்கைநெறிகளை முழுமையாகப் பூர்த்திசெய்து (NVQ) சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி ,வீரசிங்கம் மண்டபம், இல.12,கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது அந்தந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 20.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார்.(இ

# டெங்கு நோயாளியை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கான அறிவுரைகள்

●டெங்கு NSI பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்ட எல்லா நோயாளிகளையும் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

●ஒரு எதிர்மறை NSI பரிசோதனை முடிவானது டெங்கு நோய் இல்லை என்பதை உறுதிப்படுத்தாது.

●தகுதி வாய்ந்த ஒரு மருத்துவரின் ஆலோசனையின் படியே டெங்கு நோயாளியின் வீட்டு பராமரிப்பானது முன்னெடுக்கப்பட வேண்டும்.

●நாளாந்த முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனையின் (FBC) குருதிச் சிறுத்தட்டு (பிளேட்டெட் - Platelet) எண்ணிக்கைக்கு ஏற்பவே வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான முடிவானது எடுக்கப்படும்.

### இலகுவான வீட்டு பராமரிப்பிற்காக நோயின் ஆரம்ப நிலையின் போது பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள்

ஒய்வு



●உடல் ஓய்வானது அதிகமாக பரிந்துரைக்கப்படுகிறது. நீங்கள் வீட்டில் தங்கி ஓய்வெடுத்தல் அவசியம்.



காய்ச்சலைக் கட்டுப்படுத்தல்

●பரசிட்டமோலை மாத்திரம் பயன்படுத்தவும்.

●காய்ச்சலைக் குறைக்க ஒருபோதும் இபுபுரூபன், டைக்லோபினாக், மேபனமிக் அசிட் மற்றும் செலெகோக்சிப் போன்ற NSAIDS மருந்துகளைப் பாவிக்க வேண்டாம்.

●காய்ச்சலைக் கட்டுப்படுத்த ஒருபோதும் ப்ரட்னிசொலோன், டெக்சாமேதசோன் போன்ற ஸ்ரோயிட் மருந்துகளைப் பாவிக்க வேண்டாம்.

●பரசிட்டமோல் அளவு மற்றும் காய்ச்சலைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் உங்களது ்வைத்தியரின் அறிவுரைகளைப் பின்பற்றவும்.

●ஒத்தடம் பிடித்தல் - உடலில் உஷ்ணம் இருக்கும் போது தூய்மையான துவாயை மிதமான சூடுள்ள நீரில் தோய்த்து மேலதிக நீரைப் பிழிந்து அகற்றிய பின் அதைக்கொண்டு நோயாளியின் உடலை துடைக்கவும். இது காய்ச்சலை விரைவாக குறைக்க உதவும்.

எப்போது அல்லது எவ்வளவு காலத்துக்கு ஒரு தடவை முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனை (FBC) செய்யப்பட வேண்டும்?

●உங்களது வைத்தியரது பரிந்துரைக்கு ஏற்ப முழு குருதி எண்ணிக்கைப் பரிசோதனையை 8 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை அல்லது 12 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை செய்யவும்.

●இயலுமானவரை விரைவாக (குறைந்தளவு 2 மணித்தியாலங்களுக்குள்) உங்களது பரிசோதனை அறிக்கையை வைத்தியரிடம் காண்பித்து தேவையான மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

●குறுதிச் சிறுத்தட்டு எண்ணிக்கை 130,000 இற்கு குறைந்திருப்பின் உடனடியாக வைத்தியரை அணுகவும்.

●வைத்தியரைக் காண வரும் போது உங்களது பரிசோதனை அறிக்கைகள் அனைத்தையும் கொண்டுவரவும்.

உணவு



●பசி இருக்குமிடத்து எளிமையான உணவுகளை உட்கொள்ளவும்.

●சிவப்பு அல்லது மண்ணிற உணவு மற்றும் நீராகாரங்கள் மலம் அல்லது வாந்தியுடன் குருதி வெளிவருகிறதா? என அவதானிப்பதில் குழப்பங்களை விளைவிக்கும். எனவே இவற்றைத் தவிர்க்கவும்.

நீராகாரங்கள்

●வெறும் நீரை மட்டும் உள்ளெடுக்காது கனியுப்புக்களைக் கொண்ட பழச்சாறு, வெள்ளை அரிசிக் கஞ்சி, ஜீவனி, இளநீர் போன்ற நீராகாரங்களை அதிகளவு எடுக்கவும்.

●சாதாரணமாக கழிக்கும் சிறுநீரின் அளவைப் பேணும் வகையில் போதுமானளவு நீராகாரங்களைக் குடிக்கவும்.

●உங்களது உடல் நிறையை கிலோகிராமில் நிறுக்கவும். நிறை 30kg இற்கும் 50kg இற்கும் இடையில் இருப்பின் ஒரு மணித்தியாலத்துக்கு உங்கள் நிறையின் இரு மடங்கு ml நீராகாரத்தை உள்ளெடுக்கவும்.

| உடல் நிறை | ஒரு மணி நேரத்தில் உள்ளெடுக்க வேண்டிய நீராகாரத்தின் அளவு |
|---|---|
| 5kg | 20ml |
| 10kg | 40ml |
| 20kg | 60ml |
| 30kg | 70ml |
| 40kg | 80ml |
| 50kg | 100ml |
| 50kg ஐ விட கூடிய நிறை | 100ml |

●உங்கள் உடல் நிறை 30kg ஐ விட குறைவாக இருப்பின் தேவையான நீராகாரத்தின் அளவு மாறுபடும். உடல் நிறை 50kg ஐ விட அதிகம் எனின் ஒரு மணித்தியாலத்துக்கு 100ml திரவ ஆகாரத்தை உள்ளெடுக்கவும்.

●உங்களது நிறைக்கு ஏற்ற ஒரு மணி நேரத்தில் உள்ளெடுக்க வேண்டிய திரவ ஆகாரத்தின் சரியான அளவை வைத்தியரிடம் கேட்டு அறிந்து கொள்க.

●உள்ளெடுக்கும் நீராகாரத்தை அளவிட நியமமான அளவிடை கொண்ட கோப்பையைப் பாவிக்கவும்.



அளவு முகவை



கோப்பை (200ml)



கண்ணாடி குவளை (300ml)

வெளியேறும் சிறுநீரின் அளவு

●நீங்கள் ஒரு மணிநேரத்தில் உங்கள் நிறைக்கு (kg இல்) சமமான அளவு ml சிறுநீரை வெளியேற்றும் வகையில் போதுமானளவு நீராகாரத்தை உள்ளெடுக்க வேண்டும். இது உடலில் நீர் இழப்பு நிலைக்கு உள்ளாவதைத் தடுக்கும்.

●நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை சிறுநீர் கழிப்பதுடன் வெளியேறும் அளவையும் அளவிட வேண்டும்.

| உடல் நிறை (kg இல்) | ஒரு மணித்தியாலத்தில் கழிக்கப்பட வேண்டிய சிறுநீரின் அளவு | நான்கு மணித்தியாலங்களில் கழிக்கப்பட வேண்டிய சிறுநீரின் அளவு |
|---|---|---|
| 20kg | 20ml | 80ml |
| 40kg | 40ml | 160ml |
| 60kg | 60ml | 240ml |

●எதிர்பார்க்கப்பட்ட அளவை விட சிறிதளவு அதிகமான சிறுநீர் வெளியேற்றப்படின் எதுவித பிரச்சினையும் இல்லை.

●கழிக்கும் சிறுநீரின் அளவு எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைவாக இருப்பின் சிறுநீரின் அளவை சரியான முறையில் பேணும் பொருட்டு மேலதிக திரவ ஆகாரத்தை உள்ளெடுக்க வேண்டியது அவசியம்.

●நோயாளிக்கு தாகம் எடுத்தால் தாகம் குறையும் வரை நாளொன்றுக்கு 3-4 தடவைகள் வரை மேலதிக திரவ ஆகாரங்களை எடுக்கலாம்.

●நோயாளிக்கு தாகம் தொடர்ந்து இருப்பின் இயலுமானவரை விரைவாக வைத்தியரை அணுகவும்.

உள்ளெடுக்கப்பட்ட நீராகாரத்தின் அளவு, வெளியேறிய சிறுநீர் அளவு என்பவற்றை நேரத்துடன் குறித்து வைத்தல் அவசியம். வைத்தியரிடம் செல்லும் போது அதனை எடுத்துச் செல்லவும். அதற்காக கீழுள்ளது போன்ற அட்டவணையைப் பாவிக்கலாம்.

| திகதி மற்றும் நேரம் | உள்ளெடுக்கப்பட்ட நீராகாரத்தின் அளவு (ml) | திகதி மற்றும் நேரம் | வெளியேறிய சிறுநீர் அளவு (ml) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பின்வரும் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடவும்.

●தொடர்ச்சியான வயிற்றோட்டம் அல்லது வாந்தி. (இது உடலின் நீர்ச்சத்து இழப்பை ஏற்படுத்துவதால்)

●தீவிர உடல் இளைப்பு அல்லது சோம்பல் தன்மை

●இரத்தப்போக்கு (உடலின் எந்தப் பகுதியில் இருந்தும்)

●கடுமையான தலைவலி

●கடுமையான வயிற்று வலி

இது தவிர வேறு ஏதாவது உடல் உபாதைகள் இருப்பினும் எதுவித தாமதமும் இன்றி வைத்தியசாலையை நாடவும்.

வேறு நோய்கள் போல் இன்றி டெங்கு நோயின் போது காய்ச்சல் குறைவது நோய் குணமடைவதைக் குறிக்காது. ஏனெனில் காய்ச்சல் குறையும் போதே டெங்கு நோயின் சிக்கல்கள் ஆரம்பிக்கும்.

தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு

சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

# வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்படாததால் மழைகாலத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ள மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறி பத்து வருடங்களாக வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப் பெறாத நிலையிலும் கிடைக்கப் பெற்ற வீட்டுத்திட்டங்களை முழுமைப்படுத்த முடியாமலும் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்ற பெருமளவான குடும்பங்கள் தற்போதைய பருவமழையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப்பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்டிருந்தன.

இருந்த போதும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் தற்காலிக வீடுகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றன.

இதேவேளை கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வீட்டுத்திட்டங்கள் இன்றி வாழ்ந்தவர்களுக்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட நிரந்தர வீடுகள் இதுவரை முழுமைப்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது.

அதாவது, குறித்த வீட்டுத்திட்டங்களுக்கான பகுதிக்கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில் வீட்டுத்திட்டங்கள் முழுமைபெறாது காணப்படுகின்றன. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை போன்ற பிரதேசங்களில் மணலுக்குப் பதிலாக கிரவல் மண்ணை பயன்படுத்தி மாற்றீட்



டுத்தொழில்நுட்பத்தில் வீடுகளை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் இந்த வீட்டுத் திட்டங்களை விரும்பாத நிலையில் அந்த வீடுகளும் அத்திபாரங்களுடன் இடைநிறுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளில் வாழும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தற்போதைய பருவமழையால் பெரும் கஷ்டங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.(9-315)

# நூல் வெளியீடு

(சிவநகர்)

சோபா நிறுவனத்தின் அனுசரணையுடன் தொழில் உரிமைகளும் தொழில் உறவும் நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண உதவித் தொழில் நுட்ப ஆணையாளர் நிவேதிகா கேதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (9-254)




# கிளி, முல்லை மாவட்டங்களின் புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் கடமைகளை பொறுப்பேற்றார்



(முறிகண்டி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் புதிய பிரதி பொலிஸ்மா அதிபராக மகேஸ் சேனாரட்ண நேற்று தனது கட மைகளை பொறுப்பேற்றார். கிளிநொச்சி இரணைமடு சந்தி யில் அமைந்துள்ள பிரதி பொலி ஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்றுக்காலை தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரட்நாயக்க , உதவி பொலிஸ் அத்தியட்சகர் வி.பி.ஜே புஸ்பகுமார, கிளிநொச்சி தலை மைப் பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி ஈ.டபிள்யூ.ரி புஸ்ப குமார, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-100)

# நீராவியடி ஆலயத்தில் புத்தர் சிலை! புதிய ஆட்சி முறையில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது- சிவநேசன் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் மீண்டும் புதிதாக புத்தர் சிலை கொண்டு வரப்பட்டமை புதிய ஆட்சி முறையில் மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில், முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய விகாரையில் கடந்த 30ஆம் திகதி மூன்றரையடி உயர புத்தருடைய உருவச்சிலை ஒன்று பாணந்துறைப் பிரதேசத்தில் இருந்து வந்த அசங்கசாமர என்பவர் தலைமையிலான குழுவினரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விடயம், பொதுஜன பெரமுன ஆட்சி குறித்து தமிழ்மக்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு கொண்டிருந்த அச்ச உணர்வை நியாயப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இரண்டு தரப்பினரதும் வழிபாட்டு நடவடிக்கைகளை தவிர, எந்தவித கட்டுமானப் பணிகளும் முன்னெடுப்பதற்கான தடையுத்தரவை நீதிமன்று வழங்கியுள்ள நிலையிலேயே, அவ்வுத்தரவை அவமதிக்கும் வகையிலும், தமிழ்மக்களை அச்சம் கொள்ள வைக்கும் வகையிலுமே மேற்படி நடவடிக்கை சிங்கள பௌத்த கடும் போக்கு வாதிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண சபை இயங்காமலும், ஜனாதிபதியின் பிரதிநிதியாக செயற்படக்கூடிய ஆளுநர் ஒருவர் வடமாகாணத்திற்கு நியமிக்கப்படுவது இழுபறிப்பட்டுச் செல்லும் ஒரு நிலைமையிலுமே தமிழர் பிரதேசம் என்பது ஒரு புறம்போக்கு நிலம் என்பது போலவும், அங்கு அரசின் சட்ட திட்டங்களை மதிக்கத் தேவையில்லை என்பது போலவுமே நீராவியடி நிகழ்வு நடந்தேறியுள்ளது.

மேற்படி புத்த பகவான் உருவச்சிலை விவகாரத்தில் நீதித்துறையினதும் சட்ட அமுலாக்கத்துறையினதும் பக்கச்சார்பற்ற நடவடிக்கை பற்றி மட்டுமல்லாது புதிய ஜனாதிபதியின் அணுகுமுறை பற்றியும் அறிந்துகொள்ள தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

பெரும்பான்மை மக்கள் சந்தேகப்படும் வகையில் செயற்படுவதை சிறுபான்மை மக்கள் தவிர்க்க வேண்டும் என்று விரும்பும் புதிய ஜனா திபதி, சிறுபான்மை மக்கள் அச்சப்படுகின்ற, சந்தேகப் படுகின்ற நடவடிக்கைகளில் பெரும்பான்மை இனம் ஈடுபடுவதை தடுக்கும் நடவடிக்கைகளையும் விரைவாக முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்பதையும், பரஸ்பரம் நம்பிக்கை, பாதுகாப்பான உணர்வு என்பவற்றின் அடிப்படையிலேயே பொருளாதார வளர்ச்சியினையும், அபிவிருத்தியினையும் வடக்குக்கிழக்கில் புதிய ஜனாதிபதியினால் உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும் என மேலும் தெரிவித்துள்ளார். (9)

# பூநகரி பிரதேச பண்பாட்டு விழா







(பூநகரி)

பூநகரி பிரதேச பண்பாட்டு விழா பூநகரி பிரதேச செயலகரும் கலாசார பேரவைத் தலைவருமான சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் பூநகரி தெளிகரை பொது மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கலை பண்பாட்டுத் துறை பணி ப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதை தொடர்ந்து பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் "பூந்துணர்" 9 ஆவது இதழ் வெளியிடப்பட்டதுடன் பூநகரி கலாசார பேரவையால் வெளியிடப்பட்ட பூநகரி பொன்.தில்லைநாதனின் "கிளை தவறிய இலைகள்" சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. நிகழ்வில் மூன்று கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (9-84-100-350)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த அங்கஜன் எம்.பி.

(முறிகண்டி)



கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் நேரில் சென்றுபார்வையிட்டுள்ளதுடன், உடனடி உதவிகளை வழங்க பணித்துள்ளார்.

கட்டைக்காடு பெரியகுளத்தின் நீர்மட்டம் உயர்ந்தமையால் குளத்தை அண்டிய பகுதியில் குடியிருந்த மக்களுடைய வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை உதவிகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு கூறியுள்ளதுடன், தனது பங்களிப்பையும் வழங்க உறுதியளித்தனர். (9-100)

# மூலப்பொருள் இன்றி அவதியுறும் மட்பாண்டத் தொழிலாளர்கள்

## தமது தொழில் அழிந்து விடுமோ என ஏக்கம்


(கண்டாவளை)

மருவி வரும் மட்பாண்டத் தொழில் ஆங்காங்கே முன்னெடுக்கப்படுகின்றபோதும் அதற்கான மூலப்பொருளான களிமண் பெறுவதில் கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்கொள்வதாக மண்பாண்டத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப காலங்களில் குடிசைக் கைத்தொழிலாக முன்னெடுக்கப்பட்டு வந்த மட்பாண்ட உற்பத்தி கைத்தெறி (பாய்) உற்பத்திகள் நவீன பொருட்களின் வருகையால் அழிவடைந்து வருகின்றன.

அதாவது குடிசைக்கைத்தொழிலாக முன்னெடுக்கப்பட்ட மட்பாண்ட உற்பத்தி தற்போதைய அலுமினிய மற்றும் பிளாஸ்ரிக் போன்றவற்றின் வருகையால் இவற்றின் பயன்பாடுகள் மக்கள் மத்தியில் மருவிப்போயுள்ளன.

இருந்தபோதும், ஒருசில இடங்களில் மட்பாண்டங்களின் பயன்பாடு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைப்பிரதேசத்தில் தொடர்ந்து மட்பாண்ட உற்பத்தியை முன்னெடுத்து வருபவர்கள் தமது உற்பத்திக்கான களிமண்ணைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.





அதாவது. தமக்குத்தேவையான களிமண்ணை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பிராமணக்குளம் என்ற பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அந்த மண்ணை எடுத்து வருவதற்கான உரிய அனுமதிகள் தமக்கு வழங்கப்படுவதில்லை என்றும் வருடத்தில் உழவு இயந்திரம் இழுவைப்பெட்டி ஒன்றின் மூலம் பெறப்படுகின்ற ஒரு லோட்டுக்கான அனுமதியே வழங்கப்படுவதாகவும் அதற்கு மேல் அனுமதிகள் வழங்கப்படுவதில்லை என்றும் இதனால் மண் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதுடன், உரிய தொழில்களை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஜனவரி மாதத்தில் கள் உற்பத்திக்கான முட்டிகள், பொங்கல் பானை போன்ற மட்பாண்டங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்ற காலமாக இருந்தாலும் அதற்கான மண் இல்லாததால் போதிய மட்பாண்டங்களை உற்பத்தி செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தின் மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தமக்கான மண்ணைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)




# செட்டிகுளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு- பயிர்கள் பாரிய அழிவு



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளத்தில் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தினமும் நிலங்களுக்குள் நுழையும் யானைகளினாலேயே அவர்களின் விவசாயச் செய்கைகள் அழிவடைந்து வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுமார் 60 ஏக்கர் வரையிலான உழுந்து பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ள நிலையில் பல ஏக்கர் நெல் பயிர்ச்செய்கையும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரசடிக்குளம், மதவுவைத்தகுளம், பாவக்குளம், ஒன்பதாம் யூனிட் பெரியபுளியாலங்குளம் ஆகிய கிராம விவசாயிகளே யானையினால் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவும் யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் குடிமனைகளுக்குள் புகுந்தமையினால் உழுந்து பயிர்ச்செய்கைகள் மற்றும் நெல் பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் செட்டிகுளம் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.விமலேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்.

விவசாயிகள் தமது செய்கைக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தால் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு எம்மால் ஆவன செய்யப்படும். இது தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கமநல காப்புறுதி அபிவிருத்தி சபை மற்றும் சில தனியார் வங்கிகளிலும் இவ்வாறு காப்புறுதி செய்ய முடியும். கடந்த வருடமும் இவ்வாறான பாதிப்புக்குள்ளாகிய விவசாயிகளுக்கு நாம் காப்புறுதியை பெற்றுக்கொடுத்திருந்தோம்.

ஆகவே காப்புறுதி செய்யப்பட்ட விவசாயிகளாயின் அவர்களுக்கு எம்மால் நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியும் என மேலும் தெரிவித்தார். (9-299)

# உடல் அஞ்சலிக்கு

(நெளுக்குளம்)

ஈரோஸ் அமைப்பின் மூத்த செயற்பாட்டாளரும் லங்காராணி நூலின் ஆசிரியருமான அருளர் என அழைக்கப்படும் ரிட்சட் அருட்பிரகாசத்தின் உடல் வவுனியாவில் அஞ்சலிக்கு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கனகராயன்குளத்தில் அமைந்துள்ள ஈரோஸ் அமைப்பின் போராளிகள் நினைவிடத்திலேயே இன்று காலை 9 மணிக்கு உடல் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளதாகவும் அங்கு அஞ்சலி உரைகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

# பாராமுகமாக செயற்படும் அரச அதிகாரிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியாவிலுள்ள அரச அதிகாரிகளிடம் மக்கள் சென்று தமது குறைகளைத் தீர்த்துக்கொள்ள செல்லும்போது பொறுப்பிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பாராமுகமாக நடந்து கொள்கின்றனர்.

அரச சலுகைகளையும் உயர் பதவிகளையும் தம்வசம் வைத்துக்கொண்டு பதவிகளை துஷ்பிரயோகம் செய்யும் இவ்வாறு செயற்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஈ.பி.டி.பி. கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் குலசிங்கம் திலீபன் தெரிவித்துள்ளார். உயர் பதவியிலுள்ளவர்களின் நடவடிக்கையினால் கிராம மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் எமது பூர்வீக தமிழ்க் கிராமங்கள் பல குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு எமது கிராமங்களை இல்லாதொழிக்க செயற்பட்ட அரச உத்தியோகத்தர்கள், உயர் பதவியிலுள்ளவர்களின் செயற்பாடுகளை எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துச் சென்று விரைவில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (9-299)

# மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள்







ஒட்டுசுட்டான் சிவன் கோயில் வளாகத்தில் ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் இயலாமையுடைய நபர்களுக்கான தினம் நேற்று ஒட்டுசுட்டான் சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள இயலாமையுடைய நபர்கள், சிறுவர்கள், துணுக்காய், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள இயலாமையுடைய நபர்களுடன் பணியாற்றும் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- முறிகண்டி செய்தியாளர்)



உயிரிழை-முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பின் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்றுக் காலை ஏ-9 வீதி மாங்குளத்தில் உள்ள உயிரிழை-முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பின் அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.

உயிரிழை-முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பின் தலைவர் சிறிகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



(படங்கள்:-முறிகண்டி செய்தியாளர்)





சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு "மார்டப்" நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகள் தினம் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் விசேடமாக மொனராகலை மாவட்டத்திலிருந்து 31 மாற்றாற்றல் திறனாளிகள் கலந்துகொண்டனர்.

(படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# ஜம்மு-காஷ்மீரில் குடியிருப்புகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்

## அத்துமீறி நடத்திய தாக்குதலில் இருவர் பலி



(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீரில் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் உள்ள குடியிருப்புகள் மீது பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அத்துமீறி நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் 9 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்த ஆண்டு மட்டும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை பல தடவை அத்துமீறி இந்தியப் பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.


அதிலும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை இரத்துச் செய்த பின் பலமுறை அத்துமீறி இந்திய இராணுவத்தினர் மீதும், மக்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

பூஞ்ச் மாவட்டத்தில் சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ஷாப்பூர் மற்றும் கிர்னி செக்டார் பகுதியில் நேற்று முன்தினம் குடியிருப்புகள் மீது பாகிஸ்தான் இராணுவம் திடீரென்று அத்து மீறி தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலுக்கு இந்திய இராணுவம் தரப்பிலும் பதிலடி தரப்பட்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் பாகிஸ்தான் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பல வீடுகள் சேதமடைந்தன. (ஐ-2)

# மக்கள் நம்பிக்கையை வென்ற பா.ஜ.க

## பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

பா.ஜ.க. அரசால் மட்டுமே முன்னேற்றத்தை அளிக்க முடியும் என மக்கள் நம்புவதாக பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

ஜார்க்கண்ட் மாநில சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு பழங்குடியினர் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மோடி உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.


அவர் கூறுகையில், இராமர் இளவரசராக அயோத்தியை விட்டு 14 ஆண்டுகள் வனவாசம் சென்றார். காடுகளில் ஆதிவாசி மக்களுடன் வாழ்ந்து பழகிய பின்னர் 'மரியாதை புருஷோத்தமன்' ஆக மீண்டும் அயோத்திக்கு வந்து நாடு ஆண்டார்.

ஜார்ஜண்ட் முக்தி மோர்ச்சா -காங்கிரஸ் கூட்டணி இங்கு ஆட்சி செய்தபோது முதலமைச்சரின் நாற்காலி விலைக்கு விற்கப்பட்டது. அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஊழலும் கொள்ளையும் தான் முக்கிய செய்திகளாக வந்தன.

பா.ஜ.கவின் அரசியல் மக்கள் சேவையை அடிப்படையாகக் கொண்டது. எங்கள் ஆட்சிக் காலத்தில் நக்சலிசத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது.

இதன் மூலம் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மிகத் தெளிவாகத் தெரிகிறது" என்று தெரிவித்தார். (ஐ-2)

# வெடித்துச் சிதறிய எரிவாயு லொறி 23 தொழிலாளர்கள் பலி



(கார்டூம்)

சூடான் நாட்டில் எரிவாயு நிரப்பப்பட்டு தொழிற்சாலையில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்று திடீரென வெடித்து சிதறியதில் ஏற்பட்ட தீ விபத்தில் 23 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

சூடான் நாட்டின் கார்டூம் நகரில் டைல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் எரிவாயு நிரப்பப்பட்டு தொழிற்சாலையில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்று திடீரென வெடித்து சிதறியதில் தொழிற்சாலையில் தீ பற்றியது.

சூடான் நாட்டின் கார்டூம் நகரில் டைல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது.

இதில் 150 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் எரிவாயு நிரப்பப்பட்டு தொழிற்சாலையில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்று திடீரென வெடித்து சிதறியதில் தொழிற்சாலையில் தீப் பிடித்தது. (ஐ-2)


# செரமிக் தொழிற்சால... 24 பேர் உயிரிழப்பு, 1...

(கார்டூம்)

சூடான் நாட்டில் செரமிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 24 பேர் உயிரிழநதனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடான் நாட்டின் தலைநகரான கார்டூமின் பஹிர் தொழில்பேட்டை பகுதியில் கண்ணாடித் துகள்களை மூலப்பொருளாக கொண்டு தயாரிக்கப்படும் செரமிக் தொழிற்சாலை அமைந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் வழக்கம்போல தொழிலாளர்கள் தங்கள் பணிகளை செய்து கொண்டிருந்தனர். அப்போது



அந்தத் தொழிற்சாலைக்குள் நின்று கொண்டிருந்த எரிபொருள் நிரம்பிய

# பிலிப்பைன்ஸ் நாட்டைத்...

- 13 பேர் உயிரிழப்பு
- 5 இலட்சம் மக்கள் இடப்...
- 300 இற்கும் அதிகமான ...





# வெனிசுவெலா ஜனாதிப...

(கராகஸ்)

வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு பதினைந்து நாடுகள் பயணத்தடை விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆர்ஜென்டீனா, பிரேஸில், அமெரிக்கா, கொலம்பியா, சிலி, பெரு உள்ளிட்ட அமெரிக்க நாடுகளே இவ்வாறு தடை விதித்தன.

வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை பதவி விலகுமாறு

# வெளிநாடு

## லையில் தீ விபத்து; 130 பேர் படுகாயம்



லாறி திடீரென பயங்கர சத்தத்துடன் வடித்து சிதறியது. இதனால் ஏற்பட்ட தீ மளமளவென தொழிற்சாலை முழுவதும் வேகமாக பரவியது. இந்த தீ விபத்தில் சிக்கி 24 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 130 இற்கும் அதிகமானோர் படுகாய மடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத் திற்கு விரைந்து சென்ற தீய ணைப்பு மற்றும் மீட்புப் படையி னர் தீ விபத்தில் படுகாயமடை ந்தவர்களை மீட்டு சிகிச்சைக் காக அருகில் உள்ள மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து தொடர் பாக விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ஜ-2)

## துனிசியாவில் பஸ் விபத்து; 26 பேர் உயிரிழப்பு



(துனிசில்)

துனிசியாவின் தலைநகரான துனிசில் இடம்பெற்ற பஸ் விபத் தில் 26 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித் தன.

ஆபிரிக்க நாடான துனிசி யாவின் தலைநகர் துனிசில் இருந்து அயின் தரஹாம் நக ருக்கு சுமார் 50 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த நிலை யில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்து விப த்துக்குள்ளானதிலேயே 26 பேர் உயிரிழந்தனர்.

அத்தோடு குறித்த விபத்தில் சிக்கி 17 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர்.

இந்நிலையில் அப்பகுதியில் அமைந்துள்ள வீதியினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ள தோடு, பாதுகாப்பற்று காணப் படும் வீதிகளை சரிசெய்து தருமாறு அப்பகுதி மக்கள் தெரி. வித்தனர். (ஜ-2)

## தாக்கிய டிசோய் புயல்

### பெயர்வு

### விமான சேவைகள் ரத்து



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய சோய் புயல் காரணமாக பெய்துவரும் னமழை, வெள்ளம், நிலச்சரிவு போன்ற பத்துக்களில் சிக்கி இதுவரை 13 பேர் யிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டை டிசோய் என யரிடப்பட்ட சக்திவாய்ந்த புயல் தாக்கி து. மணிக்கு 150 கி.மீ. வேகத்தில் வீசும் பல் காற்றுடன் சேர்ந்து கனமழையும் காட்டித் தீர்த்து வருவதால் நாட்டின் பல் வறு பகுதிகளில் வெள்ளம், நிலச்சரிவு பான்ற சம்பவங்கள் நடைபெற்று வருகி து.

டிசோய் புயல் காரணமாக 5 இலட்சத்து தும் அதிகமான மக்கள் பாதுகாப்பான டங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மணிலாவில் உள்ள சர்வ தேச விமான நிலையம் மூடப்பட்டு 300 இற்கும் அதிகமான விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

இந்நிலையில், பிலிப்பை ன்ஸ் நாட்டை தாக்கியுள்ள புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு போன்ற விபத்துக் களில் சிக்கி இதுவரை 13பேர் உயி ரிழந்துள்ளனர். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இதையடுத்து, அங்கு மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையில், பிலிப்பைன்ஸை தாக்கியுள்ள புயல் இன்று வியாழக்கிழமை கரையை கடக்கும் என அந் நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. (ஜ-2)

## பூமியின் வரலாற்றில் இந்த ஆண்டுதான் அதிகமான வெப்பம் தாக்கியது

### அதிர்ச்சி தரும் ஆய்வு முடிவு

(மாட்ரிட்)

உலகம் இயந்திரமயமான பிறகு 2019ஆம் ஆண்டில்தான் புவி வெப்பமயமாதல் மிகவும் அதிகமாக நிகழ்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை அண்மையில் வெளியிட்டது. அந்த ஆய்வில் வெளியான தகவல்கள் பின்வருமாறு,

உலகம் இயந்திரமயமாக் கப்பட்ட இத்தனை ஆண்டுகளில் 2019ஆம் ஆண்டில்தான் புவி வெப்பமயமாதல் மிகவும் அதிக மாக பதிவாகியது. கடல் நீரில் இருந்த அமிலங்களின் நஞ்சு கடந்த 150 ஆண்டுகளுக்கு முன் னர் இருந்ததைக்காட்டிலும் தற் போது 25 சதவிகிதம் அதிக மாகி விட்டது.

மேலும், பல பகுதிகளில் புவி வெப்பமயமாதலால் பனிப்பாறை கள் உருகி கடல் நீரின் மட்டம் உல கில் இதுவரை இல்லாத அளவு க்கு மிகவும் உயர்ந்துள்ளது.

2019ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுமார் ஒரு கோடி (10 மில்லியன்) மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர்.

அவற்றில் 70 லட்சம் பேர் மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களி னால் நேரடியாக பாதிக்கப்பட டனர்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இயற்கை பேரிடர்களால் வசிப் பிடங்களை விட்டு இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 இலட்சமாக உயரக்கூ டும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டுக்கு ஒருமுறை மட்டுமே வரும் அனல் காற்று போன்ற பேராபத்துக்கள் தற் போது அடிக்கடி நிகழ்கின்றன.

அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பியாவிலும் இந்த ஆண்டு மிகவும் அதிகமாக அனல் காற்று வீசியுள்ளது என இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிப்ப தால் 2010 முதல் 2019 வரையி லான ஆண்டுகள் புவியின் மிக அதிக வெப்பமயமான ஆண்டா கும் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. (ஜ-2)

## முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகளின் கல்வியை தடுக்கும் பங்களாதேஷ்

### தனி மனித உரிமை அமைப்பு தகவல்

(நியூயோர்க்)

முகாம்களில் தங்கியுள்ள ரோஹிங்யா குழந்தைகள் கல்வி பயில்வதை பங்களாதேஷ் தடுப் பதாக தனியார் மனித உரிமை அமைப்பு தெரிவித்தது.

நியூயோர்க்கை தலைமைய கமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப் பகம் என்ற தனியார் மனித உரிமை அமைப்பு இந்தச் செய் தியை வெளியிட்டது.

'நாங்கள் மனிதர்கள் இல் லையா?' என்ற தலைப்பில் இந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கை யில், "அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள சுமார் 40,000 குழந்தைகளின் கல்வியை பங்க ளாதேஷ் தடுத்துள்ளது. முகாம் களில் உள்ள குழந்தைகள் கல்வி பயில உள்ள தடைகளை பங்க ளாதேஷ் நீக்க வேண்டும். பங்க ளாதேஷ் மற்றும் மியன்மார் அரசு ரோஹிங்யா விவகாரத்தில் தங்கள் போக்கை மாற்ற சர்வ தேச சமூகம் வலியுறுத்த வேண் டும்" என்று தெரிவித்துள்ளது. (ஜ-2)

## பதிக்கு பயணத்தடை!

திர்க்கட்சிகளும் பொதுமக்களும் நீண்ட லமாக வலியுறுத்தி வருகின்றன.

எனினும் இதனை ஏற்றுக்கொள்ள வர் தொடர்ச்சியாக மறுப்புத் தெரிவித்து ருகிறார்.

இந்தநிலையிலேயே குறித்த நாடுகள் கூட்டாக இணைந்து மேற்கொ ண்ட சந்திப்பு ஒன்றினைத் தொடர்ந்து இவ்வாறு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ஜ-2)

## நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள அமெரிக்க ஜனாதிபதி பிரிட்டன் விஜயம்

(லண்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் டரம்ப் நேட்டோ நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள் ளும் முகமாக பிரித்தானியாவுக் கு கடந்த திங்கட்கிழமை விஜயம் செய்தார். பிரித்தானியாவின் முக்கிய பொதுத்தேர்தல் இடம் பெறுவதற்கு 10 நாட்களே உள்ள நிலையில் அவரது இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது. தான் இந்த விஜயத்தின் போது ஐரோப்பிய நேச நாடுகளது பாதுகாப்பு செலவீ னம் தொடர்பான பங்களிப்பை ஊக்குவிக்கப் போவதாக இந்தப் பயணத்தின் போது டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. டொனால்ட் ட்ரம்பின் மேற்படி விஜயம் பொதுத் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில் தன்னைப் பாதிக்கக்கூடும் என பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்ஸன் கவலையடைந்துள ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# மோசடியாளர்களைப் பாதுகாக்கும் நிலை மாற்றப்பட வேண்டும்

## அசாத் சாலி வலியுறுத்து இரு கட்சிகள் மீதும் அதிருப்தி



(கொழும்பு)

**ஆட்சிக்குவரும் பிரதான கட்சிகள் இரண்டும் கடந்தகால அரசாங்கங்களில் மோசடிகளில் ஈடுபட்டவர்களை பாதுகாத்தே வந்திருக்கின்றன. யாரையும் சிறைக்கு அனுப்பிய வரலாறு இல்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.**

தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தை ஒரு மாதகாலத்துக்கு ஒத்திவைப்பதாக அறிவித்திருக்கின்றார். டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வின் போது மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான கோப்குழுவின் விசாரணை அறிக்கையை சபைக்கு சமர்ப்பிப்பதாக கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி ஏற்கனவே தெரிவித்திருந்தார். என்றாலும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதால் கோப்குழுவின் விசாரணை அறிக்கை செல்லுபடியற்றதாக மாறியுள்ளது.

எனவே இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக மக்களின் பணம் வீண் விரயமாகுவ்துடன் மோசடிக்காரர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலையும் ஏற்படுகின்றது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

அத்துடன் 19 ஆம் திருத்தம் இல்லாமலாக்கப்பட்டால் ஆணைக்குழுக்கள் அனைத்தும் செயலிழந்துவிடும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஆட்டோவில் குப்பைக் கூடை சாரதிக்கு குவியும் பாராட்டுகள்

(கொழும்பு)

ஆட்டோவில் பயணிப்போர் குப்பைகளை வீதியில் வீசாமல் இருக்க தனது ஆட்டோவில் குப்பைக் கூடை ஒன்றை பொருத்தியுள்ளார் அதன் ஓட்டுநர். அவரின் இச்செயலை பலரும் பாராட்டி வருகின்றனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ஒருவரே இவ்வாறு செய்துள்ளார். இது தொடர்பிலான படங்களுடன் அவரது கருத்தும் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.



"என்னுடைய ஆட்டோவில் பயணிப்பவர்கள் ஏதாவது சாப்பிடுவார்கள். அதில் மிஞ்சும் கழிவை வெளியில் தூக்கி எறிவார்கள். இவ்வாறு என் கண் முன்னால், இந்த சூழலுக்கு சென்றுசேரும் குப்பைகளை அகற்ற நினைத்தேன். அதனால் என்னுடைய ஆட்டோவில் குப்பைக்கூடை ஒன்றை பிரத்தியேகமாக வைத்துள்ளேன்.

பயணிகள் தங்களுடைய குப்பையை இந்தக் கூடையில் போடலாம். மாலையில் வீடு திரும்பியதும் அல்லது குப்பை கொட்ட அரசாங்கம் ஒதுக்கியுள்ள இடங்களை தாண்டும் பொழுது சேகரித்த குப்பைகளை அங்கு கொட்டிவிடுகிறேன்" என அந்த ஆட்டோச் சாரதி தெரிவித்தார். (இ-7)

# சிவில் பாதுகாப்புப் படையினரின் சீருடைகளுடன் ஒருவர் கைது

(வத்தளை)

கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வத்தளை பகுதியில் பாதுகாப்பு படையினர் பயன்படுத்திய சீருடை வைத்திருந்த ஒருவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர்.



தேசிய பாதுகாப்புக்காக கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொள்கின்ற கூட்டு நடவடிக்கைகளின் போதே வத்தளை பகுதியிலுள்ள வீதித் தடுப்புக்கு அருகில் நீர் கொழும்பிலிருந்து கொழும்புக்கு பயணித்த சந்தேகத்திற்கிடமான லொறியொன்று கண் காணிக்கப்பட்டதுடன் குறித்த லொறி பரிசோதிக்கப்பட்டபோது சிவில் பாதுகாப்புப் படையினர் பயன் படுத்திய சீருடைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, லொறிச் சாரதி தெளிவான விளக்கங்களை வழங்கத் தவறிய நிலையில், சந்தேக நபரான லொறிச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் கூடலுஓயா பகுதியில் வசிக்கும் 23 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். மேலும் இச்சம்பவம் குறித்து வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தானம்

இராமாயணத்தைச் சம்பந்தப்படுத்தி எத்தனையோ பழங் கதைகள் உண்டு. அதிலேயும் சில நயங்கள், கருத்துக்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு கதை இது. இலங்கையில் எல்லாம் முடிந்தது. இராமர் இலங்கையை விபீஷனனுக்குத் தானமாகக் கொடுக்கின்றார். அவனுக்கு மகுடம் சூட்டுகின்றார். பட்டாபிஷேகம் முடிந்தது. அதன்பின்பு அங்கே என்ன வேலை. எல்லோரும் அயோதிக்குப் புறப்பட்டார்கள்.

பயண ஏற்பாடுகள் எல்லாம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அப்பதான் சீதைக்கு அந்த அம்மிக் கல்லினுடைய ஞாபகம் வந்தது. அதாவது வேறு ஒன்றுமில்லை அங்கே ஓர் அபூர்வமான அம்மிக் கல் இருந்தது. அதிலே ஒரு விசேடம் என்ன என்றால் அதிலே ஒரு பொருளை வைத்து அரைத்தால் அந்தப் பொருளினுடைய இயற்கையான வாசனை இன்னமும் அதிகமாகுமாம். அந்தப் பொருளுடைய தரமும் குணமும்கூட கூடுமாம். இப்படி இந்த அம்மிக் கல்லினுடைய குண விசேடத்தை ஆரம்பத்திலே திரிசடை சொன்னபோதே சீதை மனதிலே ஒரு சின்ன ஆசை அயோதிக்குப் போகிறபோதே இதை எப்படியாவது கொண்டு போக வேண்டும் என்பது. இப்பொழுது அதற்கான நேரம் வந்து விட்டது. என்ன செய்வது புதுவிதமான ஒரு பொருளைப் பார்த்து விட்டால் எல்லாப் பெண்களுக்கும் இயற்கையாக வரக் கூடிய ஒரு ஆசை தான் இது. இப்பொழுது அதுக்கு என்ன செய்யலாம் என்று யோசிக்கிறார்கள். உடனே அனுமன் தான் இதற்குப் பொருத்தம் என்று தோன்றுகிறது. உடனே அனுமனைக் கூப்பிட்டு அந்த அம்மிக் கல்லைக் காட்டி இதோ பாரப்பா...இந்த அம்மிக் கல்லை எப்படியாவது அயோதிக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட வேண்டும் என்றார்கள். சஞ்சீவி மலையையே பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்த அனுமனுக்கு இது ஒரு பெரிய வேலையா? உடனே அம்மிப் பக்கம் ஓடினார். சீதை சொன்னார் சஞ்சீவி பர்வதத்தை எடுக்கிற போது காட்டின உன்னுடைய முரட்டுத் தனத்தை இந்த சின்ன அம்மிக் கல்லிடம் காட்டினால் அது சுக்கு நூறாக உடைந்து விடும். அதனாலே ரொம்ப ஜாக்கிரதையாக அதை எடுக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்தார். அனுமன் சரி என்று சொல்லிவிட்டு தரையிலே பதித்திருந்த அந்த அம்மியை எடுப்பதற்கு மெதுவாக கொத்த ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் அந்தப் பக்கமாக ஜாம்பவான் வந்தார். வயதான பெரியவர் என்னப்பா இது எல்லோரும் ஊருக்குக் கிளம்பிக் கொண்டு இருக்கிற நேரத்திலே நீ அந்த கல்லைப் பெயர்த்துக் கொண்டிருக்கிறாய் என்றார். இது சீதாபிராட்டியின் ஆணை என்றார் ஆஞ்நேயர். அவரா இப்படி ஆணையிட்டார் என்று கேட்டுக் கொண்டே சீதையிடம் சென்று அப்படியா என்று கேட்டார். ஆமாம் இது ஒரு அதிசயமான அம்மி. திரிசடை தான் சொன்னாள். அதுதான் அதை எடுக்கும்படி அனுமனிடம் சொன்னேன். அதிலே என்ன தப்பு என்றார். ஜாம்பவான் சொன்னார்...தங்களுடைய கணவர் இலங்கையை வீபீஷனனுக்கு தானமாகக் கொடுத்துவிட்டார். தானமாக ஒரு பொருளை ஒருவரிடம் கொடுத்தார் என்றால் மறுபடியும் அதிலேயிருந்து எதையும் திரும்ப வாங்கக் கூடாது. தானம் வாங்கினவனே தருகிறேன் என்று சொன்னாலும் அதை வாங்கக் கூடாது. அப்படி வரங்கினால் தானம் செய்வதாலே வரும் புண்ணியமும் போய்விடும். இராமபிரான் பெற்ற அப்படிப்பட்ட புண்ணியம் இந்த அற்பமான கல்லாலே கெட்டுப் போக வேண்டாமே என்று நினைத்துத்தான் பயப்படுகிறேன் என்றார் ஜாம்பவான். சரியான நேரத்திலே உண்மையைச் சொல்லி பாவச் செயலிலேயிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். எங்கள் புண்ணியம் உங்களாலே காப்பாற்றப்பட்டது என்றார் சீதை. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். அது எவ்வளவு உண்மை என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொண்டேன் என்று சொல்லி அனுமன் சிரித்தாராம். நீ சொல்லின் செல்வன் என்பதை நிரூபித்துவிட்டாய் என்றார் ஜாம்பவான்.

இப்படி ஒரு பழங்கதை. இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தானம் கொடுத்த எதையும் திருப்பி வாங்க வேண்டும் என்று ஆசைப்படாதே என்பது தான். தானமாகக் கொடுப்பதை திருப்பி வாங்கிறதும் தப்பு. அதேமாதிரி நமக்கு தானமாக வந்த ஒன்றை தரம் பார்த்துக் கொண்டிருப்பதுவும் தப்பு. ஒரு பசு மாட்டை ஒருவர் நமக்குத் தானமாக கொடுக்கிறார். கொடுத்தவரிடம் இது காலையிலே எவ்வளவு கறக்கும். மாலையிலே எவ்வளவு கறக்கும் என்பதைக் கேட்டுக் கொண்டு இருக்கக் கூடாது. தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்துப் பார்க்காதே என்று ஒரு பழமொழி இருக்கின்றது. என்ன அர்த்தம் தானமாக வந்த மாட்டைப் பல்லைப் பார்த்து.... அதுக்கு என்ன வயது? நல்ல மாடுதானா? என்று சோதிக்காதே என்று அர்த்தம். அப்படி சோதித்தால் கொடுத்தவனுக்கு மரியாதை இல்லை. நம்ம ஆள் ஒருத்தர் ஒரு பசு மாட்டை ஒருவரிடம் தானமாகக் கொடுத்து அனுப்பி விட்டார். அதன் பின்பு சொன்னார் நான் தானமாகக் கொடுத்த அந்த மாட்டை அவன் பல்லைப் பிடித்துப் பார்த்தாலும் நான் ஒன்றும் கவலைப்படமாட்டேன் என்றார். ஏனென்று கேட்டேன்.

"பல்லெல்லாம் போனதன் பின்பு தானே அதை நான் தானம் செய்திருக்கிறேன். அது இனிமேல் எதற்கும் உபயோகப்பட மாட்டாது சேர்" என்றார் ரொம்ப சாவகாசமாக!

# பல்கலை.போதனைசார் பணியாள் தொகுதியினர் சட்டத்தரணியாகப் பணியாற்ற அனுமதியில்லை

## மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் போதனைசார் பணியாள் தொகுதியினர் எவரும் சட்டத்தரணிகளாகச் செயற்பட முடியாது என்றும், போதனைசார் பணியாளர்கள் தமது வழக்கமான பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவ்வப் பல்கலைக்கழகங்களின் - கல்வி நிறுவனங்களின் ஆளும் அதிகார சபை (பேரவை) அனுமதியுடன் பிரசித்த நொத்தாரிசுக்களாக பணியாற்ற முடியும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அவதானங்களுக்கு அமைவாக 21.11.2013 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 885 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து, 05.09.2019 இல் நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1017 ஆவது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் உறுதி செய்யப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10/2019 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் மூலம் சகல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கும் இந்த அறிவிப்பை அவர் தெரியப்படுத்தினார். (இ-7)

# இலங்கையில் மண்சரிவைக் குறைக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு




(கொழும்பு)

இலங்கையில் மண்சரிவுகளைக் குறைக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்தது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை - நிக்கஹ பகுதியில் மண்சரிவு முகாமைத்துவம் தொடர்பில் தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் மண்சரிவு ஆய்வு பிரிவிற்கு கண்காணிப்பு உபகரணமொன்றை பரிசளித்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

இதற்கிணங்க, அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி நிறுவகத்தின் பொறியியலாளரும் புவியியல் நிபுணர்களும் கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்து மண்சரிவு ஆராய்ச்சி உபகரணங்களை இலங்கையில் நிறுவ நடவடிக்கை எடுத்தனர்.

அத்துடன், மண்சரிவு தொடர்பான வரைபடத்தின் தரத்தை மேம்படுத்தல், அனர்த்தங்களுக்கு பதிலளிப்பதில் விஞ்ஞானிகளின் பங்களிப்பு ஆகியவை குறித்தும் அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி நிறுவகத்தின் அதிகாரிகள் தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் அதிகாரிகளை தெளிவூட்டினர்.

அமெரிக்காவின் வெளிநாட்டு இடர் முகாமைத்துவ அலுவலகமும் நாட்டில் மண்சரிவு அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக தூதரகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# பிரதமர் மகிந்தவிற்கு கடிதமொன்றை எழுதியனுப்பியுள்ள லண்டன் சிறுவன்


(கொழும்பு)

லண்டனைச் சேர்ந்த சிறுவனொருவர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை எழுதியனுப்பியுள்ளார்.

குறித்த கடிதம் தொடர்பில் பிரதமர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். அதில், அப்துல்லா அபுபயிட் அனுப்பிய கடிதம் இன்று காலை எனக்குக் கிடைத்தது. அந்தக் கடிதத்திற்காக அவருக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்.

இந்தக் கடிதம் எனக்கு உந்துதல் மற்றும் ஊக்குவிப்பை அளித்துள்ளது. மேலும் பழைய தலைமுறையினராகிய நாங்கள் எங்கள் இளைஞர்களிடம் வைத்திருக்கும் பொறுப்பையும் அது நினைவூட்டியது.

ஒரு நாள் உங்களை நேரில் சந்திப்பேன் என்று நம்புகிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)




# நான்கு உயிர்களைக் காவு கொண்ட கற்குவாரிகளின் அனுமதிப்பத்திரம் ரத்து

## அரசாங்கம் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

மண்மேடு சரிந்து விழுவதற்கு காரணமான வலப்பனை பகுதியிலுள்ள கற்குவாரிகளின் அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டது.

நுவரெலியா வலப்பனை பகுதியில் கடந்த 30 ஆம் திகதி மண்மேடு சரிந்து விழுந்ததில் நால்வர் உயிரிழந்த நிலையில் மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த பகுதியில் கற்குவாரிகள் உள்ளதே மண்மேடு சரியக் காரணமென பல தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த கற்குவாரிகளுக்கு அரசாங்கம் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. (இ-7)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

### வரவு-செலவுத்திட்டம் - 2020

1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2019.12.05 ஆம் திகதி தொடக்கம் 2019.12.11 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும், சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங்களிலும் பொதுமக்கள் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

(C-8427)- க.தர்ஷன், தவிசாளர், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.


## மரண அறிவித்தல்

பிறப்பு: 1937.05.03



மறைவு: 2019.12.04

### செல்லம்மா கந்தையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா கந்தையா அவர்கள் 04.12.2019 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னி வைரவன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் கேதீஸ் வரன் (கேவினாத் மெற்றலிஸ்ற் உரிமையாளர்), ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் மகேஷ்வரன், லிங்கேஸ்வரன் அகிலேஸ்வரி (யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்), ஞானேஸ் வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும்.

லூர்த்துநிலா, விமலராணி, சுகந்தினி, நாகேஸ்வரி, ரஞ்சனி, கருணாகரன் (யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்), மாலினி (சாவகச்சேரி வைத்தியசாலை அரச ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகம்மா, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மகாதேவன், சந்திராதேவி, இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.12.2019 இன்று வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஒரு மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (1375) தகவல்: குடும்பத்தினர்.

# பாராளுமன்ற அதிகாரத்தைப் பலப்படுத்தும் 19ஆவது திருத்தத்திற்கு முழு ஆதரவு

## இராஜாங்க அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதைக் காட்டிலும் தேவையான பொது விடயங்களை மேலதிகமாக இணைத்துக் கொள்வதே பொருத்தமானதாக அமையும். பாராளுமன்ற அதிகாரத்தை பலப்படுத்தும் இத்திருத்தச்சட்டத்திற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கொள்கைப் பிரகாரம் முழு ஆதரவையும் வழங்குவேன் என இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

இடைக்கால அரசாங்கம் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஒரு தரப்பினரால் குறிப்பிட்டுக் கொள்ளப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமாயின் இத்திருத்தத்தை இரத்துச் செய்வதாக அரசாங்க தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளமையும் கவனத்திற்குரியது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் அரச நிர்வாக செயலொழுங்கு மற்றும் அதிகார பிரயோகம் உள்ளிட்ட விடயங்களில் சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாகவே கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி - பிரதமர் ஆகிய இருவருக்கும் இடையில் அதிகார பிரயோகம் தொடர்பான முறுகல் நிலை தொடர்ந்து ஏற்பட்டது.

இருப்பினும் இத்திருத்தம் பல வரவேற்கத்தக்க விடயங்களையும் கொண்டுள்ளது என்பதை அரசியல் கருத்துக்களுக்கு அப்பால் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தினை அதிகார ரீதியில் பலப்படுத்துவதாக அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பல ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

பாராளுமன்றத்தின் செயற்பாட்டு ரீதியான அதிகாரங்களை பலப்படுத்தி பாராளுமன்றத்தை பலமிக்கதாக்க வேண்டும் என்பது ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பிரதான கொள்கையாக காணப்படுகின்றமையால் கட்சியின் கொள்கையின் பிரகாரம் இவ்விடயங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நீக்குவதைக்காட்டிலும் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் குறித்து ஒரு தீர்வை முன்வைத்து, தேவையான பொது விடயங்களை மேலதிகமாக இணைத்துக் கொள்வதே தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமானதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## உலர் உணவுப் பொதிகள் வழங்கல்



(கொடிகாமம்)

மறவன்புலவு, கைதடி, நாவற்குழி தெற்கு, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிகப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மறவன்புலவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் அ.நிமலரோகன் தலைமையிலும் கைதடி நாவற்குழி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பீனர் திருமதி பா.மல்லிகா தலைமையிலும் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் லண்டன் கிளையின் நிர்வாகச் செயலாளர் இ.ராஜ்மோகன் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (இ-114)

## இலங்கை இரண்டு தேசங்களாக பிரிக்கப்பட வேண்டும் என்று எங்கும் தெரிவிக்கப்படவில்லை

### பிரி.கொன்சர்வேற்றிவ் கட்சி மறுப்பு

(லண்டன்)

இலங்கை இரண்டு தேசங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என கொன்சர்வேற்றிவ் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்படவில்லை என அக்கட்சியின் பிரதித் தலைவர் போல் ஸ்கலி தெரிவித்தார்.



பிரித்தானிய நாடாளுமன்ற தேர்தலுக்காக கொன்சர்வேற்றிவ் கட்சி முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை இரண்டு தேசங்கள் பிரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக டுவிட்டரில் கருத்துக்கள் பகிரப்பட்டன.

இந்த விடயம்தொடர்பாக நேற்று டுவிட்டரில் பதிவிட்ட கொன்சர்வேற்றிவ் கட்சி பிரதித்தலைவர் "இலங்கை இரண்டு தேசங்களாக பிரிக்கப்பட வேண்டும் என கொன்சர்வேற்றிவ் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்படவில்லை. நல்லிணக்கம், ஸ்திரத்தன்மை மற்றும் நீதியை அடைவதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். இரு மாநிலம் தொடர்பான கூற்று மத்திய கிழக்கு நாடுகளுடன் மட்டுமே தொடர்புடையது" எனப் பதிவிட்டார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, இலங்கை இரண்டு தேசங்களாக பிரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டமை பாரிய அச்சுறுத்தலாகும்"என கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




சமூக நீதிக்கும் உரிமைக்குமான மாற்றுத் தலைமுறை அமைப்பும், ரொட்டரக்ட் நிறுவனமும் இணைந்து தமிழ்மொழி மூலமான பயிற்றுவிப்பாளர்களுக்கான இலவச பயிற்சி நெறியை யாழ்ப்பாணம் கியூடெக்கில் அண்மையில் நடத்தின. இதில் பயிற்று விப்பாளர்களாக ரி.சந்துரு மற்றும் எஸ்.செந்துர்ராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:- அராலி செய்தியாளர்)

# சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றிய தமிழ்ப் பெண் கடத்தப்பட்ட சம்பவம் சி.ஐ.டி. முக்கிய தகவல் வெளியீடு

## கணவருக்கு வெளிநாடு செல்லத்தடையில்லை

(கொழும்பு)

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றிய தமிழ் பெண்ணின் கணவருக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது.

சுவிட்சர்லாந்து தூதரகத்தில் பணியாற்றும் உள்நாட்டு தமிழ் பெண் ஊழியர் காரில் கடத்தப்பட்டு சில மணிநேரம் தடுத்து பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதப்படுகொலை விசாரணைப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக மனிதப் படுகொலை விசாரணைப்பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவிற்கு அதன் முதல் அறிக்கையை சமர்ப்பித்தது.

இதன்போது ஆறிக்கையை ஆராய்ந்த நீதவான், குறித்த பெண்ணை டிசெம்பர் 9 ஆம் திகதிவரை நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து உத்தர விட்டார்.

மேலும் அவரின் கணவருக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் அந்தப் பெண்ணின் கணவர் கடத்தல் குறித்து சில தகவல்களை அறிந்திருந்தாலும் அவை விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையில்லை. எனவே அவருக்கும் பயணத்தடை விதிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விடுத்த கோரிக்கையை நிராகரிக்கிறேன் என கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை இவ்விடயம் குறித்து விபரித்த சி.ஐ.டி.யின் மனிதப் படுகொலை விசாரணை அதிகாரி ரஞ்சித் முனசிங்க, கடத்தலுக்கு முன்னதாக பெண்ணின் நடமாட்டம் குறித்த கூகிள் வரைபடங்கள், கடத்தலுக்கு பாவிக்கப்பட்ட வாகனத்தின் படங்களை சுவிஸ் தூதரகம், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் சுவிஸ் தூதரகம் வழங்கிய முறைப்பாட்டில், குறித்த பெண் அதிகாரி வெள்ளைக் காரில் கடத்தப்பட்டதாகவும் அவரை உள்ளேயே அடைத்து வைத்து பாலியல் துன்புறுத்தல் புரிந்துள்ளதாகவும் அவரது கையடக்கத் தொலைபேசி பலாத்காரமாக பறித்து அதில் இருந்த தகவல்களைப் பெற்றதாகவும் சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் புகுந்துள்ளதாகக் கூறப்படும் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா குறித்து விசாரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

தூதுவர் சார்பில் அந்தத் தூதரகத்தின் இரண்டாம் நிலை அதிகாரி அதில் கையொப்பம் இட்டுள்ளாரென்றும் தெரிவிக்கப் படுகிறது.

இதன்படி கடந்த நவம்பர் 25 ஆம் திகதியே இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுவதுடன் முறைப்பாடு கிடைக்கப் பெற்ற நவம்பர் 27 முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவென சி.ஐ.டியின் மனிதப் படுகொலை விசாரணை அதிகாரி ரஞ்சித் முனசிங்க தெரிவித்தார்.

"இது தொடர்பாக சி.ஐ.டி. அதிகாரிகள் சுவிஸ் தூதுவருடன் கலந்துரையாடியுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டதாகக் கூறப்படும் தூதரகப் பெண் அதிகாரி இலங்கை தமிழ் பெண். அவர் அந்தத் தூதரகத்தில் விசா அல்லது குடிவரவு விபரங்கள் தொடர்பிலான பிரிவில் சேவையாற்றியுள்ளார். அந்தப் பெண் தொடர்பிலான அடையாளத்தையும் முறைப்பாட்டின்போது தூதரகம் வழங்கவில்லை.

கடத்தலுக்கு உள்ளானதாக கூறப்படும் பெண்ணின் கணவர் தனியார் வங்கியில் பணிபுரிகிறார். அவர்களது வீடு மருதானை மாளிகாகந்த பகுதியில் அமைந்துள்ளது. அங்கு அதிகாரிகள் வாக்குமூலம் பெறச் சென்ற போதும் வீடு பூட்டியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண் இதுவரை வாக்குமூலம் வழங்கவில்லை. தூதரகமும் அவரை முன்னிலைப்படுத்தவில்லை. அவர் கணவர், பிள்ளைகள், தாய் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது" எனக் கூறினார்.

இதனையடுத்து நீதவான் லங்கா ஜயரட்ன, சி.ஐ.டியின் மனிதப் படுகொலை விசாரணை அதிகாரி ரஞ்சித் முனசிங்கவிடம் கேள்விகளை தொடுத்து விடயங்களை தெளிவுபடுத்திக் கொண்டார்.

விடயங்களை ஆராய்ந்த நீதவான், "இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் அது பாரிய குற்றமாகும். எனவே பாதிக்கப்பட்டதாக்க் கூறப்படும் பெண் முதலில் சி.ஐ.டிக்கு சென்று வாக்குமூலம் வழங்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

அவர் வாக்குமூலம் வழங்கும் வரை நாட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கிறேன். எதிர்வரும் 9 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சி.ஐ.டியில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்க வேண்டும்" எனக் கூறி வழக்கை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தர விட்டார். (இ-7)





நாவற்காடு வரணி கரம்பை அ.மி.த.க. பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் அதிபர் ச.அகிலன் தலைமையில் பாடசாலை அரங்கில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன், தென்மராட்சி வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

## சுற்றுலாப் பயணிகளுக்கான இணையத்தளம் வடமாகாணத்தில் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுற்றுலாப் பணியகமானது தனக்கான இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 27.11.2019 ஆம் திகதி புதன்கிழமை சுற்றுலாப் பணியகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இதன்மூலம் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் வடமாகாணத்தின் சுற்றுலா தொடர்பான எல்லா வகையான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் வடமாகாணத்தின் புகழ்பெற்ற சுற்றுலா மையங்களையும் அவற்றை சென்றடையக் கூடிய வழிகளையும் இலகுவில் தெரிந்து கொள்ள முடியும். (இ)

## ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தி பிரதமர் மகிந்தவிடம் மகஜர் கையளிப்பு



(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சருமான சுப்பையா சதாசிவம் பிரதமரும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவை அமைச்சு செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து இந்திய வம்சாளி மக்கள் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்ததோடு மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

நடந்து முடிந்த தேர்தலின் போது மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுத் தருவதாக வழங்கிய வாக்குறுதிக்கமைய ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு அந்த மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கியதாக சதாசிவம் தெரிவித்தார். (இ-7)

## பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்கினால் நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவேன்



(கொழும்பு)


தனது பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிராக நிச்சயம் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

நான் கடந்த 44 வருடங்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவும் நீண்ட காலம் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்துள்ளேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் கட்டணத்தையும் இதுவரை நான் எந்த வித குறையுமின்றி தொடராக செலுத்தியுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பறிப்பது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அந்தப் பதவியைக் கொடுப்பதற்கு என்றிருந்தால், என்னிடம் கட்சி அது குறித்து கலந்துரையாடியிருக்கலாம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நியாயமற்ற முறையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிப்பதை விட்டுவிட்டு, என்னிடம் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு உறுப்பினர் பதவியைக் கேட்டிருந்தால், நான் ஒருபோதும் தீர்மானம் எடுக்கப் பின்னின்றிருக்க மாட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மித்ர சக்தி-VII'- அப்பியாச பயிற்சிகள் இந்தியாவில்




(பூனே)

இலங்கை- இந்திய நாடுகளுக்கு இடையிலான உறவு முறையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை இந்திய இராணுவப் படையணிகள் கூட்டாக இணைந்து மேற்கொள்ளும் அப்பியாச பயிற்சிகள் தொடர்ச்சியாக 7 ஆவது தடவையாக பூனேயிலுள்ள அன்ட் இராணுவ நிலையத்தில் இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பமானது.

இந்த அப்பியாசப் பயிற்சியை இந்திய இராணுவத்தின் உயரதிகாரியான மேஜர் ஜெனரல் கரன் பீர் சிங் பிரார் ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை கெமுனு ஹேவா படையணியைச் சேர்ந்த 11 அதிகாரிகள் மற்றும் 109 படை வீரர்கள் இந்த அப்பியாசப் பயிற்சிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மாலை இந்தியாவை நோக்கிப் புறப்பட்டனர்.

இந்திய இராணுவத்திலுள்ள குமணன் படையணியினர் இந்த "மித்ர சக்தி" பயிற்சியில் பங்கேற்றுக் கொண்டனர்.

'மித்ரசக்தி' அப்பியாச பயிற்சி ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளின் தற்போதைய இயக்கவியல் நடைமுறை மற்றும் விரிவான கலந்துரையாடல்கள் மற்றும் தந்திரோபாய பயிற்சிகள் மூலம் இணைக்க வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நிலச்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 3 மாவட்டங்களுக்கு நிலச்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை, கண்டி மற்றும் நுவரெலிய மாவட்டங்களுக்கே மேற்படி நிலச்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## நடமாடும் வைத்திய சேவை

(சிவநகர்)

கெல்பேஜ் சிறிலங்கா அமைப்பின் முதியோர்களுக்கான நடமாடும் வைத்திய சேவை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் கிளி.சிவநகர் மூத்தோர் சங்கத்தின் பங்களிப்புடன் சிவநகர் மூத்தோர் சங்கமண்டபத்தில் நாளை 06 வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இதில் கற்றாக் சத்திர சிகிச்சை, குறுந்தூர, நெடுந்தூர பார்வைக்கான மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் மற்றும் சிறுநீர் இரத்தப்பரிசோதனைகள் என்பனவும் நடைபெறவுள்ளதாகவும் இதில் மூத்தோர் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (9-254)





மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி சிறார்கள் தரம் ஒன்றுக்கு செல்வதற்காக அண்மையில் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வின் போது...


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1907

### குட்டி




### விஜய்

நம்மள கேட்காம
கொள்ளாம
பெத்துக்க
வேண்டியது...
இதில
இப்படி இரு
அப்பிடி
இருன்னு
ADVICE வேற...
க்க்க்கும்....



### கீதா



ஆசிரியர்: பரீட்சையில ஒரு பக்கம் தான் எழுதியிருக்கிறாய்...
கொஞ்சம் கூட வெட்கமா இல்லை உனக்கு?
மாணவன்: டீச்சர்... சிங்கம் SINGLE SHEET லதான் எழுதும்
பண்ணனீங்க தான் பக்கம் பக்கமா எழுதும்

### ராணி

10 வருடத்துக்கு முன்ன பிரிந்து போன காதலிய
மறக்க முடியலைன்னு புலம்புறானுங்க...



ஆனா 10 நாளுக்கு முன்ன நம்மட்ட வாங்குன
கடனை மட்டும் மறந்திடுறானுங்க..!

### சாரு



FB-ல எல்லா பொண்ணுங்களும் பசங்கள
அண்ணா அண்ணானு கூப்பிடுறாங்களே...
எல்லா பொண்ணுங்களும் ஐயர் ஆத்து
பொண்ணுங்களா இருப்பாங்களோ..!

### கரன்

கரண்ட் தொட்டாலே ஷாக் அடிக்குது
அப்படியென்றால் எப்படி தொடாமல் கண்டு
பிடித்திருக்க முடியும் ஒன்றும் புரியலையே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சு.கவின் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்பட்ட சகல எம்.பிக்களுக்கு எதிராகவும் நடவடிக்கை

## ஐ.ம.சு.முன்னணியின் பொதுச் செயலாளர் அமரவீர அறிவிப்பு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டு, கட்சி ஒழுங்கை மீறிய சகல எம்.பிக்களினதும் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர அறிவித்துள்ளார்.**

ஏ.எச்.எம்.பௌசியை கட்சியிலிருந்து நீக்குவது தொடர்பான கடிதத்தில் தான் கையொப்பமிட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், அவருக்கு தேவையானால் சட்ட உதவியை நாடமுடியும் எனவும் தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நேற்றுக்காலை விஜயம் செய்த போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

# தமிழர் விரோதக் கொள்கைகளிலிருந்து இந்திய அரசு இறங்கி வர வேண்டும்

## தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 28 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் அனைவரும் மனிதாபிமான அடிப்படையிலும் தமிழ் நாடு அரசுக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற பரிந்துரையின் அடிப்ப டையில் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை வலியுறுத்தியது.

இவர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் பல போராட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் எல்லாம் கடந்த காலங்களில் நடந்தன.

எனவே இவர்களைத் தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பதால் எந்தவிதமான பலனும் இந்திய மத்திய அரசுக்கு இல்லை. 28 ஆண்டுகளாக மாறிமாறி ஆட்சிக்கு வந்த இந்திய மத்திய அரசுகள் இவர்களை விடுதலை செய்யக்கூடாது என்ற பிடிவாதக் கொள்கையில் இருந்து சற்றும் இறங்கி வரமுடியவில்லை.

எனவே தற்பொழுது உள்ள இந்திய மத்திய அரசானது தமிழர்களுக்கு எதிரான எண்ணங்களை விடுத்து நீண்டகாலமாக சிறையில் வாடும் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை இந்திய மத்திய அரசை வலியுறுத்தி நிற்கின்றது என அந்த அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் 13 பேர் கைது

## ஹெரோயின் பறிமுதல்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

பாணந்துறை, கல்கிஸ்ஸ, ஹொரணை, ரத்கம, அம்பாந்தோட்டை மற்றும் தங்காலை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு ஸ்கது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 20 கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இதையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படடதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் நியூசிலாந்து இராஜதந்திரிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பு





(கொழும்பு)

இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் அஹமட் அல் மு அல்லா நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதியுடன் சுமுகமாக கலந்துரையாடிய தூதுவர், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தி எதிர்காலத்தில் மிகுந்த ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளதாக உறுதியளித்தார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய தொலை நோக்குடனான நிகழ்ச்சித்திட்டங்களைப் பாராட்டிய தூதுவர் அதனை வெற்றிபெறச் செய்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார். இதேவேளை, இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் ஜோன்னா கேம்பர்ஸ் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியை சந்தித்து தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இரு நாடுகளுக் குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தி பரஸ்பர நன்மைகளை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளதாக இதன் போது அவர்கள் உறுதியளித்தனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 280 | 160 | 200 |
| தக்காளி | 140 | 120 | 120 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 100 | 70 | 80 |
| கோவா | 100 | 140 | 120 | 80 | 220 |
| கரட் | 250 | 250 | 280 | 200 | 300 |
| பூசணி | 80 | 60 | 50 | 70 | 60 |
| புடோல் | 120 | 80 | 50 | 40 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 140 | 105 | 180 |
| பாகற்காய் | 200 | 160 | 140 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 60 | 120 |
| பயற்றங்காய் | 140 | 150 | 140 | 130 | 160 |
| லீக்ஸ் | 150 | 220 | 260 | 300 | 320 |
| பீற்றூட் | 180 | 100 | 200 | 60 | 200 |
| கறிமிளகாய் | 250 | 260 | 260 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 800 | 450 | — | — |
| போஞ்சி | 140 | 120 | 120 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 80 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 400 | 250 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 350 | — | 400 | — | — |
| முள்ளங்கி | 140 | 100 | 100 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 120 | 60 | 160 | 80 |

## விடுகதைகளும் விடைகளும்

• கடைசி வார்த்தையில் மானம் உண்டு. முதல் வார்த்தையின் மென்மைக்காக இறந்தன பூச்சிகள். காஞ்சியில் நான் யார்?

**பட்டுத்துணி**

• படபடக்கும், பளபளக்கும், பண்டிகை வந்தால் வானில் பறக்கும். அது என்ன ?

**பட்டாசு**

• ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?

**பற்கள்**

• உணவை எடுப்பான் ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?

**அகப்பை**

• காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை. அது என்ன?

**சூரியன்**

• கந்தல் துணி கட்டியவன். முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?

**சோளக்கதிர்**

• கடல் நீரில் வளர்ந்து . மழை நீரில் மடிவது என்ன?

**உப்பு**

• ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடிவரும் பந்து அல்ல அது என்ன?

**கடல்**

• காலையிலும் மாலையிலும் நெட்டை, மதியம் குட்டை நான் யார்?

**நிழல்**


• இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. அது என்ன?

**சைக்கிள்**

• சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?

**கண்**

## தோட்டத்து மண்ணிலே



தோட்டத்து மண்ணிலே
வட்டமான மெத்தையிலே
சொகுசா தூங்குறா
சின்ன அவரை பாப்பா
சொட்டு சொட்டாய் மழை பெய்யுது

தட்டி தட்டி எழுப்புது
விழிச்சி விழிச்சி பாக்குறா
நெளிஞ்சு நெளிஞ்சு வளையுறா
வானம் பார்த்து சிரிக்கிறா
சின்ன அவரை பாப்பா




# சொல்லின் செல்வன்



அது முதியோர்களுக்கான கல்வி வகுப்பு. தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருந்தது.

"ஐயா, "சொல்லின் செல்வன்" என்பது யாரைக் குறிக்கும்?" என்று கேட்டார் ஒரு மாணவர்.

"அனுமனைக் குறிக்கும்" என்றார் தமிழ் ஆசிரியர்.

"சொல்லின் செல்வன்" என்றால் என்ன பொருள்?"

"செல்வம் என்றால் உங்களுக்குத் தெரியும். ஒருவர் சொல்லும் சொற்கள் மதிப்புள்ளவையாக இருந்தால் அவரைச் "சொல்லின் செல்வன்" என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்"

"அனுமனுக்குச் "சொல்லின் செல்வன்" என்ற பட்டத்தைக் கொடுத்தவர் யார்?"

"கம்பர்தான் அனுமனைச் "சொல்லின் செல்வன்" என்று வர்ணிக்கிறார். ஆனால் அனுமனுக்கு இந்தப் பட்டத்தை சீதாப் பிராட்டியே வழங்கியிருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது".

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அசோக வனத்தில் சீதையிடம் மூன்று தரப்பினர் உரையாடுகிறார்கள். ஒருவன் ராவணன், இரண்டாவது சீதையைக் காவல் காக்கும் அரக்கிகள், மூன்றாவது அனுமன். இந்த மூவரும் அவரிடம் எப்படிப் பேசுகிறார்கள் என்று பார்ப்போம்.

"அரக்கிகள் சீதையிடம் இரு விதமாகப் பேசுகிறார்கள். ஒரு புறம், நயமாகப் பேசி அவரை ராவணனை ஏற்றுக் கொள்ளச் செய்ய முயல்கிறார் கள். இதுபோன்ற பேச்சில் இனிமை இருந்தாலும் உண்மை இல்லை, வஞ்சகம்தான் இருக்கி றது. இன்னொரு புறம், கடுமை யான சொற்களால் அவரை · பயமுறுத்துகிறார்கள். ராவணனின் இச்சைக்கு இணங்காவிட்டால் ராவணன் சீதையைக் கொன்று விடுவான் என்று மிரட்டுகிறார்கள்.

"ராவணன் சீதையுடன் பேசும் போதும் இதே அணுகுமுறையைத்தான் பயன்படுத்துகிறான். இந்த இரு தரப்பினர் பேச்சிலும் வஞ்சம் இருக்கிறது, கடுஞ்சொற்கள் இருக்கின்றன. அன்பு இல்லை, உண்மை இல்லை. இனிமையாகப் பேசுவது போல் பேசும்போதும் வஞ்சம் உள்ளிருப்பதால் அங்கே இனிமையும் இல்லை.

"மாறாக அனுமன் பேச்சில் இனிமை இருக்கிறது, உண்மை இருக்கிறது. வஞ்சம், கபடம் எதுவும் இல்லை.

அனுமன் பேச்சை சீதை மிகவும் பாராட்டியதாக வால்மீகி, கம்பன் இருவருமே குறிப்பிட்டிருக்கின்றனர்.

எனவேதான் "சொல்லின் செல்வன்" என்ற பட்டத்தை சீதையே அனுமனுக்கு அளித்திருப்பார் என்று நான் நினைக்கிறேன்".

"ஐயா! நீங்களும் "சொல்லின் செல்வர்தான்!"

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"நாங்கள் பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்டால் கூட, எங்களைக் கடிந்து கொள்ளாமல் பொறுமையாகவும் இனிமையாகவும் பதில் சொல்கிறீர்களே, அதனால்தான் அப்படிச் சொன்னேன்".

"நன்றி. திருவள்ளுவரின் அறிவுரையைப் பின்பற்றினால், நாம் எல்லோருமே "சொல்லின் செல்வர்"களாக ஆகலாம். உங்கள் வாயிலிருந்து வரும் சொற்கள் அன்பு நிறைந்தவையாகவும் வஞ்சம் இல்லாதவையாகவும் உண்மையானவையாகவும் இருக்க வேண்டும். அவ்வளவுதான்!" என்றார் தமிழாசிரியர்.

குறள் 91

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்



அ.சில்வஸ்டார், தரம் 07, யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா, SOS சிறுவர் கிராமம்.

## விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்

- மின்காந்தக் கொள்கை - மாக்ஸ்வெல்
- எலக்ட்ரான் - J.J.தாம்சன்
- மின்குமிழ் - தோமஸ் அல்வா எடிசன்
- ஒட்சிசன், நைதரசன் ஒக்சைட்- J.B.பிரீஸ்ட்லி
- ஈர்ப்பு விதி - நியூட்டன்
- பெனிசிலின் - சேர் அலெக்சாண்டர் பிளெமிங்
- கோள்களின் இயக்க விதி - கெப்ளர்
- சூரியக் குடும்பம் - கோபர் நிகஸ்
- தனிம வரிசை அட்டவணை - மெண்டலீஃப்
- நீராவி எஞ்சின் - ஜேம்ஸ் வாட்
- புவிஈர்ப்புவிசை - சேர் ஐசக் நியூட்டன்

> தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும்.
> உண்மைக்கு அது வேண்டியதில்லை.
> – தாமஸ் ஜெயபர்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கோரிக்கை திரிகரணசுத்தி கொண்டதா?

வட பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொதுமக்கள் பொலிஸாருக்கு உதவுமாறு யாழ். மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் ரத்நாயக்க கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்ற மகேஷ் ரத்நாயக்கவின் கோரிக்கை பொறுப்புள்ள ஓர் அதிகாரி முன்வைக்கக்கூடிய வேண்டுகையாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அதேநேரம் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவைப் பேண கடுமையாகப் பாடுபடுவேன் என்றும் அவர் தனது பதவியேற்பு உரையில் கூறியுள்ளார்.

நல்லது. வடபகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்குவேன் என உறுதியளித்த யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் ரத்நாயக்கவுக்கு எமது வாழ்த்துக்கள்.

தவிர, வடபகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸாருக்குப் பொதுமக்கள் உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடபகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டப் பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டிருப்பாராயின் அதுகண்டு வடபகுதி மக்கள் மகிழ்ந்திருப்பர்.

அதாவது வடபகுதியில் சட்டம் ஒழுங்கை மீறுவதில் பொலிஸாரே முதன்மை வகிக்கின்றனர் என்பது வடபகுதி மக்களின் கருத்து.

இதை நாம் கூறுவதற்காக யாரும் எம்மைப் பகை கொண்டு பாராதீர்கள். மாறாக பொலிஸார் தொடர்பில் வடபகுதிப் பொதுமக்கள் கொண்டுள்ள கருத்து நிலை என்ன என்பதை யாழ்.மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொருத்தமான அணுகுமுறையூடாக ஆய்வு செய்வாராயின், பொலிஸார் தொடர்பில் பல உண்மைத் தகவல்களை அறிய முடியும்.

குறிப்பாக வடபகுதியில் நடந்து வரும் வாகன விபத்துக்களுக்குக் காரணம் போக்குவரத்துப் பொலிஸார் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை. அவர்கள் ஏ9 வீதியில் மரங்களுக்குள் மறைந்து நின்று, வாகனங்களை இடைமறித்து இலஞ்சம் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர் என்ற கருத்து உண்டு.

இஃது எல்லாப் பொலிஸாருக்கும் பொருந்தாது. நேர்மையாகப் பணியாற்றுகின்ற பொலிஸாரும் நம் மத்தியில் உள்ளனர்.

எனவே இங்கு நாம் கூறுவது இலஞ்சம் வாங்குகின்ற பொலிஸார் தவிர, மற்றவர்களை அல்ல என்பதை நேர்மையுடன் பணியாற்றும் பொலிஸார் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

இவை ஒருபுறமிருக்க, முல்லைத்தீவில் தமிழ் மக்கள் சட்டம் ஒழுங்கை மதித்து நீதிமன்றத்தை நாடி நிற்க,

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீறி பௌத்த தேரரின் பூதவுடல் நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் வைத்து எரியூட்டப்பட்டது.

நீதிமன்றம் விதித்த தடை உத்தரவையும் மீறி பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டபோது; அதற்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர் எனில், சட்டம் ஒழுங்கை மீறியது வடபகுதி மக்களா? அல்லது பொலிஸாரா? என்பதை புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரிகரண சுத்தியோடு ஆராய்ந்தால், அவரின் பணி இலகுவாக அமையும் என்பது நம் தாழ்மையான கருத்து.

# கோட்டா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் அதிகரிப்பு

### எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியேற்ற பின்னர் தேடுதல்கள், விசாரணைகள், அச்சுறுத்தல்களை தாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்ற இலங்கை பத்திரிகையாளர்களின் கரிசனைகளை பகிர்ந்து கொள்வதாக எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பின் ஆசியா பசுபிக்கிற்கான தலைவர் டானியல் பாஸ்டார்ட்தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச இலங்கை ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வார காலத்திற்குள் இலங்கையின் பத்திரிகை சுதந்திரத்தின் மீது அதன் தாக்கம் தெரிய ஆரம்பித்துவிட்டது.

ஆரம்ப இலக்குகளாக நியுஸ்ஹப் எனப்படும் செய்தி இணையத்தளம் காணப்பட்டது. அதன் அலுவலகத்தை நவம்பர் 26 ம் திகதி சோதனையிட்ட பொலிஸார், கணணிகள், மடிக்கணணிகள் ஆகியவற்றில் உள்ளடக்கங்களை ஆராய்ந்தனர்.

நியுஸ் ஹப்பின் அலுவலகத்தை சோதனையிடுவதற்கான தாங்கள் அனுமதி பெற்றுள்ளதாக தெரிவித்து பொலிஸார் காண்பித்த ஆவணத்தில் 12 டிசம்பர் 2018 என்ற திகதி காணப்பட்டது, அந்த ஆவணம் ஒரு வருடத்திற்கு முன்னர் காலாவதியாகிவிட்டது.

எனினும் இந்த குற்றச்சாட்டினை அலட்சியம் செய்த பொலிஸார் இணையத்தளத்தின் அனைத்து கணணிகளிலும் கோட்டா என்ற வார்த்தை உள்ளதா என சோதனை செய்தனர், கோட்டாபய என ஏதாவது குறிப்பு காணப்படுகின்றதா என கண்டுபிடிப்பதற்காக அவ்வாறு செய்தனர்.

சுயாதீன செய்தி ஊடகத்தின் மீதான பொலிஸாரின் முழுமையான சோதனையும்,குற்றவியல் நடைமுறைகள் மோசமாக மீறப்பட்டமையும் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியின் கீழ் ஊடக சுதந்திரம் குறித்து கவலை தரும் சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளன.

பத்திரிகையாளர்களை அச்சுறுத்தாமல் அவர்களின் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு அரசாங்கம் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்களை விடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமிழ் நாளிதழான தினப்புயலின் ஆசிரியர் சக்திவேல் பிரகாஸ் வவுனியாவில் சீருடை அணியாத பொலிஸாரால் பல மணி நேரம் விசாரிக்கப்பட்டார். விடுதலைப் புலிகள் குறித்து வெளியான கட்டுரைகள் படங்கள் குறித்து அவரிடம் பல மணிநேரம் விசாரணை செய்த பின்னர் அவரின் நிருபர்கள் அனைவரினதும் விபரங்களை கோரினார்கள். அவர் அதனை வழங்க மறுத்துவிட்டார்.

லீடர் என்ற செய்தி இணையத்தளத்தின் யூடியுப்பிற்கு பொறுப்பாகவுள்ள சஞ்சய் தனுஸ்க என்பவர் 26 ம் திகதி சிஐடியினரால் விசாரணை செய்யப்பட்டார்.

வொய்ஸ் டியுப் என்ற செய்தி இணையத்தளத்தின் ஆசிரியர் துசார விதாரன 28ம் திகதி சிஐடியினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். கடந்த காலத்தில் லீடர் என்ற இணையத்தளத்தில் பணியாற்றிய வேளை தனது நடவடிக்கைகள் குறித்து இரண்டு மணிநேரம் விசாரணை செய்யப்பட்டதாக அவர் எமக்கு தெரிவித்தார். அவர் அந்த இணையத்தளத்தில் தற்போது பணிபுரியவில்லை என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ம-3)

### மாகாண சபைத் தேர்தலை

# பழைய முறையில் நடத்த அரசியல் கட்சிகள் இணக்கம்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடாத்துவதற்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர்கள், தேர்தல்கண்காணிப்பு அமைப்பு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தலை எதிர்வரும் வருடம் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியளவில் நடாத்த வாய்ப்புள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்படுமாயின், குறித்த தினத்தில் பாராளுமன்ற தேர்தலை நடாத்த கூடிய வாய்ப்பு காணப்படுவதாக இந்த கலந்துரையாடலின் போது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தாக மனோ கணேசன் தெரிவித்தார்.

அதேபோல், எல்லை நிர்ணயம் நடவடிக்கைகள் இதுவரையும் முறையான நிலையில் இல்லாமையினால், மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைக்கே நடாத்த அனைவரும் உடன்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.(ம-3)

### 200 பொலிஸார், 17 வாகனம்

# விசேட சலுகை கோரி ரணில் மகிந்தவுக்கு கடிதம்

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு விசேட சலுகை கோரி, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஓய்வுபெற்ற பிரதமர் ஒருவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்குரிய சலுகைகளை பெறலாமென்பதை சுட்டிக்காட்டியே ரணில் இந்த சலுகைகளை கோரியுள்ளார்.

பாராளுமன்ற செயலாளர் ஊடாக, ரணில் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

பிரதமர் மகிந்தவிற்கு அனுப்பப்பட்ட இந்த கடிதம் தற்போது ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குண்டு துளைக்காத வாகனம், நோயாளர் காவு வண்டி, 200 பொலிசார், 17 இராணுவத்தினர், பொலிஸாருக்கு 9 வாகனங்கள், ரணிலின் அலுவலகத்திற்கு 8 வாகனங்கள், பிரத்தியேக வைத்தியர், தாதியர், உத்தியோகபூர்வ வாசஸ்தலம், அலுவலகம், அதற்கான பணியாளர்கள், செயலாளர் ஆகியோரை ரணில் கோரியுள்ளார்.(ம-3)

# சத்திய தரிசனம்

## இதுவே சிறந்த காணிக்கை



❖ கடவுள் எப்போதும் உங்களுடன் இருக்கிறார். அவர் உங்களைச் சுற்றியோ, அருகிலோ, பக்க வாட்டிலோ இருக்கிறார்.

❖ மனிதன் இரக்ககுணம் கொண்டவனாக இருக்க வேண்டும். ஏழை எளியவர்க்கு இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

❖ நல்வாழ்வு பெறுவதற்கான உயர்ந்த வழியை ஏற்படுத்தித் தரும் கல்வியே பயனுள்ளது.

❖ கடவுள் நாம் சொல்வதைக் கேட்கக்கூடிய தூரத்தில் தான் இருக்கிறார்.

❖ தீமையில் இருந்து விடுபட்ட தூயமனமே, கடவுள் விரும்பும் சிறந்த காணிக்கையாகும்.

❖ மனைவியின் ஒழுக்கமே, கணவனைக் காப்பாற்றும் ஆயுதம்.

❖ கடவுள் ஒருவரே. எந்த வடிவத்தை வழிபட்டாலும் அவர் ஒருவரையே நாம் வழிபடுகிறோம்.

❖ எப்போதும் கடவுள் சிந்தனையில் இருப்பது தான் உண்மையான சாதனை.

❖ ஒழுக்கத்துடன் வாழ்வது அவசியம். ஒழுக்கம் இல்லாத வாழ்வு அத்திபாரம் இல்லாத கட்டடத்தைப் போன்றது.

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்**

16
2019

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பாரினில் பெண்கள் பாங்குடன் உயர்ச்சி பெற பாதுகாப்பான சூழல்தனை குடும்பத்திலிருந்தே அமைத்திடுவோம்.

JSAC

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நல்லவர்களை தேர்ந்தெடுத்துப் பழகுங்கள். வாழ்வில் முன்னேறுவதற்கு இதுதான் சிறந்த வழி.

- வாரியார் சுவாமிகள்

# 2019 இலங்கை கிரிக்கெட் விருதுகள் அறிவிப்பு!

## இரண்டு விருதுகளை தட்டிச்சென்ற மலிங்க, பெரேரா

2019ஆம் ஆண்டு சர்வதேச மற்றும் உள்ளூர் சர்வதேச கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடிய இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நவம்பர் 3ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள வாட்டர் எட்ஜ் ஹோட்டலில் விருது வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. சிறப்பு விருந்தினராக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ் கலந்து கொண்டார்.

இதில், சர்வதேச போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியோருக்காக 17 விருதுகளும், உள்ளூர் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியோருக்காக 27 விருதுகள் உட்பட மொத்தம் 44 விருதுகள் வழங் கப்பட்டன.

அத்துடன் ஆண்டின் சிறந்த சர்வதேச மற்றும் உள்ளூர் நடுவர் மற்றும் போட்டி ரீவியூ விருதுகள் வழங்கப்பட்டன.



**2019 சிறந்த வீரர்களுக்கான விருதுகள்**

சிறந்த டெஸ்ட் துடுப்பாட்டகாரர் - திமுத் கருணாரத்ன.

சிறந்த டெஸ்ட் பந்து வீச்சாளர் தில்ருவான் பெரேரா.

சிறந்த டெஸ்ட் ஓல்-ரவுண் டர் - தனஞ்சய டி சில்வா.

சிறந்த ஒருநாள் துடுப்பாட்டகாரர் - குசல் பெரேரா.

சிறந்த ஒருநாள் பந்து வீச்சாளர் - லசித் மலிங்க.

சிறந்த ஒருநாள் ஓல்-ரவுண்டர் - திசர பெரேரா.

சிறந்த இருபது-20 துடுப்பாட்டக்காரர் - திசர பெரேரா.

சிறந்த இருபது-20 பந்து வீச்சாளர் - லசித் மலிங்க.

சிறந்த இருபது-20 ஓல்-ரவுண்டர் - இசுரு உடான.

**2019 சிறந்த வீராங்கனைகளுக்கான விருதுகள்:**

சிறந்த ஒருநாள் துடுப்பாட்டகாரர் -சாமரி அத்தப்பத்து.

சிறந்த ஒருநாள் பந்து வீச்சாளர் - ஓஷதி ரணசிங்க.

சிறந்த ஒருநாள் ஓல்-ரவுண்டர் - சாமரி அத்தப்பத்து.

சிறந்தஇருபது-20 துடுப்பாட்டக்காரர் - சாமரி அத்தப்பத்து.

சிறந்த இருபது-20 பந்துவீச்சாளர் - சஷிகலா சிறிவர்த்தன.

சிறந்த இருபது-20 ஓல்-ரவுண்டர் - சஷிகலா சிறிவர்த்தன.

2019 ஆம்ஆண்டின் சிறந்த பெண்கள் கிரிக்கெட் வீரர் - சாமரி அத்தப்பத்து.

**2019 சிறந்த நடுவர்களுக்கான விருதுகள்**

சிறந்த சர்வதேச நடுவர் - குமார் தர்மசேன.

சிறந்த உள்ளூர் நடுவர் - லிண்டன் ஹன்னிபால்.


போட்டி ரீவியூ விருது உள்ளூர் குழு - மனோஜ் மெண்டிஸ்.

வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர் - பத்தும் நிஸ்ஸங்கா.(க)

---

# ஒரு ஓட்டத்திற்கு 5 விக்கெட்டுக்கள்

## சர்வதேச கிரிக்கெட்டில் எந்த வீரர்களாலும் முறியடிக்கப்படாமல் தொடரும் சாதனை



கிரிக்கெட் உலகைத் தனது அசுரத்தனமான பந்துவீச்சால் மிரள வைத்த கோர்ட்னி வால்ஷின் ஒரு ஓட்டத்திற்கு 5 விக்கெட் வீழ்த்திய சாதனையை இன்றளவும் எந்த நாட்டுப் பந்துவீச்சாளராலும் முறியடிக்கப்படவில்லை.

கடந்த 1986 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி இலங்கை அணிக்கு எதிராக ஷார்ஜா கிண்ணம் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணியின் கோர்ட்னி வால்ஷ் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இலங்கைக்கு எதிராக பந்து வீசிய கோர்ட்னி வால்ஷ் 4.3 ஓவர்களில் 3 மெய்டன்கள் எடுத்து ஒரு ரன் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அதாவது ஒரு ஓட்டத்திற்கு 5 விக்கெட் வீழ்த்தி வால்ஷ் சாதனை புரிந்தார். அவரின் இந்த சாதனையானது இன்றளவும் எந்த நாட்டுப் பந்துவீச்சாளராலும் முறியடிக்கப்படவில்லை.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 45 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்கள் சேர்த்தது.

அதிரடியாக ஆடிய ரிச்சார்ட்ஸன் சதம் அடித்து 109 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் கிரினீட்ஜ் 67 ஓட்டங்களில் வெளியேறினார்.

இருவரும் முதல் விக்கெட்டுக்கு 132 ஓட்டங்கள் என்ற வலுவான அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். அடுத்து வந்த நம்பிக்கை நாயகன் ரிச்சார்ட்ஸ் 39, ஹார்பர் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

249 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. இலங்கை அணியில் ரணதுங்கா, அரவிந்த் டி சில்வா, குரு சிங்கே, திலகரத்னே, மகானாமா போன்ற தலைசிறந்த வீரர்கள் இருந்தும் மேற்கிந்திய தீவுகள் அணியின் அசுரத்தனமான பந்துவீச்சுக்கு முன்னிற்க முடியவில்லை.

மார்ஷல், கிரே, பெஞ்சமின், வால்ஷ் என 4 வேகப்பந்து வீச்சாளர்களின் பந்தும் மின்னல் வேகத்தில் களத்தில் பாய்ந்தது. இலங்கை வீரர்கள் சீட்டுக்கட்டுபோல் சரிந்து வெளியேறினர்.

அதிலும் கடைசி 5 விக்கெட்டுகளும் வால்ஷின் பந்துவீச்சுக்கு இரையாகின. 28 ஓவர்கள் வரை தாக்குப் பிடித்த இலங்கை அணி 55 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 193 ஓட்டங்களில் தோல்வியை தழுவியது.

4.3 ஓவர்கள் வீசி 3 மெய்டன்கள் எடுத்து ஒரு ரன் மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வால்ஷ் ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார். தொடர் நாயகன் விருதையும் வென்றார். (க)

---

# உலகின் மிகப் பெரிய மைதானம்

## இந்தியாவுக்குக் கிடைக்கப்போகும் கௌரவம்

1982ஆம் ஆண்டு அகமதாபாத்தில் உள்ள மொதேராவில் சர்தார்பட்டேல் கிரிக்கெட் ஸ்டேடியம் கட்டப்பட்டது. இங்கு 12 டெஸ்ட் மற்றும் 24 ஒருநாள் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த ஸ்டேடியத்தை இடித்து 63 ஏக்கர் பரப்பளவில் புதிய ஸ்டேடியம் கட்டும்பணி நடந்து வருகிறது. இதற்கான பணிகள் விரைவில் முடிகிறது. தொடக்க விழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

அகமதாபாத்தில் உள்ள இந்த கிரிக்கெட் மைதானம் உலகின் மிகப்பெரிய ஸ்டேடியமாக கருதப்படுகிறது. ரூ.700 கோடியில் கட்டப்பட்டுள்ள இந்த ஸ்டேடியத்தில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரசிகர்கள் அமரலாம். இதனால் இது உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் ஸ்டேடியமாக கருதப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பேர்ன் மைதானம் தான் இதற்கு முன்பு பெரிய ஸ்டேடியமாக இருந்தது. அங்கு 90 ஆயிரம் ரசிகர்கள் அமரும் வகையில் இருக்கைகள் உள்ளன.

அகமதாபாத்தில் கட்டப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய ஸ்டேடியத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவர் கங்குலி, செயலாளர் ஜெய்ஷா ஆகியோர் நேரில் பார்த்து ஆய்வு செய்தனர். அவர்கள் 2 மணி நேரம் அந்த ஸ்டேடியத்தை சுற்றிப்பார்த்தனர்.



ஸ்டேடியத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்து குஜராத் மாநில சங்க நிர்வாகிகள், கங்குலிக்கு எடுத்துரைத்தனர்.

இந்த ஸ்டேடியத்தில் தொடக்க ஆட்டமாக ஆசிய லெவன்- உலக லெவன் அணிகள் மோதும் காட்சி போட்டியை நடத்த கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான அனுமதியை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் (ஐ.சி.சி.) கேட்டுள்ளதாக கங்குலி தெரிவித்தார். ஐ.சி.சி. ஒப்புதல் அளித்தால் இந்த போட்டி மார்ச் மாதம் இந்த ஸ்டேடியத்தில் நடத்தப்படும். இந்த ஸ்டேடியத்தில் 70 கார்ப்பரேட் பாக்ஸ், 4 டிரெஸ்சிங் அறை (வீரர்கள் இருக்கும் பகுதி), ஒரு கிளப் ஹவுஸ் மற்றும் நீச்சல் குளம் உள்ளிட்ட பல நவீன வசதிகள் உள்ளன.. (க)

---

# ஒவ்வொரு தொடரிலும் பகல்-இரவு டெஸ்ட் கிரிக்கெட்

## கங்குலி விருப்பம்

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் முதல் முறையாக பகல்-இரவு டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடியது. கொல்கத்தாவில் பங்களாதேசத்துக்கு எதிராக நடந்த இந்த பிங்க் நிற பந்து டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. சில ஆண்டுகளாக இந்திய அணி பகல்-இரவு டெஸ்டில் விளையாட தயக்கம் காட்டி வந்த நிலையில் இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் சவுரவ் கங்குலியின் முயற்சியால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் கங்குலி அளித்த ஒரு பேட்டியில், 'பகல்-இரவு டெஸ்ட் கிரிக்கெட் எனக்கு மிகுந்த நம்பிக்கையும், உற்சாகமும் அளிக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட்டை முன்னெடுத்துச் செல்ல இந்த போட்டி அவசியமாகும். ஒவ்வொரு டெஸ்டும் பகல்-இரவு போட்டியாக இருக்க வேண்டியதில்லை. ஒரு தொடரில் குறைந்தது ஒரு டெஸ்ட் பகல்-இரவு மோதலாக இருக்க வேண்டும். பகல்-இரவு டெஸ்டை நடத்தியதில் எனது அனுபவங்களை கிரிக்கெட் வாரியத்தின் மற்ற நிர்வாகிகளுடன் பகிர்ந்து கொள்வேன். மற்ற இடங்களிலும் பிங்க் பந்து டெஸ்டை நடத்த முயற்சிப்போம். இப்போது ஒவ்வொரு வீரரும் இத்தகைய போட்டியில் விளையாட தயாராக இருக்கிறார்கள். வெறும் 5 ஆயிரம் ரசிகர்களுக்கு முன்னிலையில் விளையாடுவதை யாரும் விரும்பவில்லை' என்றார்.



அதே சமயம் இந்திய கப்டன் விராட் கோலி, பகல்-இரவு டெஸ்ட் போட்டி என்பது எப்போதாவது மட்டுமே நடக்க வேண்டுமே தவிர வழக்கமாகி விடக்கூடாது என்று கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது. (க)

## பயங்கரவாத...

அனுமதியளித்தார்.

சந்தேகநபர் மினுவாங் கொடை நீதிமன்றில் கட்டுநாயக்க பொலிஸாரால் நேற்று முற்படுத்தப்பட்டார்.

ஒட்டமாவடி, நீராவோடை, ஆலிம்பாதை பகுதியை சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபரையே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர். சந்தேகநபரை மூன்று தினங்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்று அனுமதியளித்தது.

சந்தேகநபர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அல்லது அவரது குடும்ப உறுப்பினரை கொலை செயற்வதற்காக திட்டமொன்றை தீட்டியிருந்ததாக தகவல்கள் கிடைத்தது.

சந்தேகநபர், மேலும் 3 பேருடன் கட்டுநாயக்க அமந்தொலுவ, ஜயவர்தனபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு வசித்து வந்த நிலையில், கைதுசெய்யப்பட்டார்.

ஏனைய மூவரும் ஏதேனும் குற்றம் ஒன்றை இழைக்க தயாரில்லை என்ற விடயம் உறுதியானதை அடுத்து, அவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.

இதன் காரணமாக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ், சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள அனுமதியளிக்கவேண்டும் என்று மன்றுரைத்த பொலிஸார், பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக்காவல் அனுமதியையும் நீதிமன்றில் முன்வைத்தனர்.

இதற்கமைய, விடயங்களை ஆராய்ந்த நீதவான், அதற்கு அனுமதி வழங்கியதுடன், விசாரணை நிறைவடைந்தவுடன் சந்தேகநபரை வரும் சனிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டார். (ம-3)

## யாழிலுள்ள தனியார் கல்வி...

முன்தினம் விடுத்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ் மாவட்டச்செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சுகாதார வைத்திய அதிகாரிகள் விசேடமாக ஒரு கருத்தை முன்வைத்திருந்தனர்.

அதாவது யாழ் மாவட்டத்தில் டெங்கு மற்றும் தொற்று காய்ச்சல் தீவிரமாக பரவி வரும் நிலையில் தனியார் கல்வி நிறுவனங்களில் அதிகளவு மாணவர்கள் சென்று கல்வி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

அங்கு குறித்த நோய்கள் பரவுவதற்கான சூழல் அதிகமாக காணப்படுவதால் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்றல் நடவடிக் கைகளை இரு வாரங்களுக்கு இடை நிறுத்தி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்திருந்த னர்.

சுகாதார துறையினரின் குறித்த வேண்டுகோளுக்கமைய அரச அதிபர், குறித்த அறிவித்தலை பிரதேச செயலர்களுக்கு விடுத்துள்ளதுடன் அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களும் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (ம-9)

## ஏப்ரல் 25,27...

பெற்ற சிறப்புக் கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்தது.

இதேவேளை, பாராளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கிழக்கு ஆளுந...

கிழக்கு மாகாண ஆளுநராக தொழிலதிபரும் சமூக செயற்பாட்டாளருமான அநுராதா யஹம்பத் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண வடமத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று மாலை பதவியேற்றனர். எனினும் வடக்கு மாகாண ஆளுநர் நியமனம் மட்டும் இன்னும் இடம்பெறவில்லை. (ம)

## கிணற்றில் தவறி...

இதில் 5 வயதுடைய குகதீசன் நருஜன் எனும் சிறுவனே உயிரிழந்துள்ளார். வீட்டில் தாயும் தந்தையும் வெளியில் சென்ற நேரம் குறித்த சிறுவன் தனிமையில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

வீட்டுக்கு வந்த தாயும் தந்தையும் மகனைக் காணாது தேடிய போது குறித்த சிறுவன் கிணற்றில் மிதந்து கொண்டு இருந்துள்ளார்.

உடனடியாக சிறுவனை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்த போதும் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## தூதரக பணி...

ருந்து வெளியே கொண்டு செல்வதற்கான அனுமதி கோரப்பட்டது என தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தூதரக பணியாளரை கொண்டு செல்வதற்காக அம்புலன்ஸ் விமானத்தை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு சுவிஸ் அதிகாரிகள் முயன்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 25 ம் திகதி இடம் பெற்றதாக தெரிவிக்கப்படும் சம்பவம் குறித்து குறிப்பிட்ட பெண்ணிடமிருந்தோ அல்லது தூதுவரிடமிருந்தோ உத்தியோகபூர்வ முறைப்பாடுகள் எதனையும் பெறாத போதிலும் தூதுவர் வழங்கிய குறைந்தளவு தகவல்களை அடிப்படையாகவைத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர் என தெரிவித்துள்ள அமைச்சர் இந்த விசாரணைகளின் போது குற்றச்சாட்டுகள் சிறிதளவு கூட உண்மையில்லை என்பது தெரிய வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

## யாழ்.பல்கலை...

தலைமையில் 11 அமர்வுகளாக நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைப்பீடம், விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம், விவசாய பீடம், மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 1369 உள்வாரிப் பட்டதாரிகளுக்கும், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 64 பட்டப் பின்படிப்பு பட்டதாரிகளுக்கும், 31 டிப்ளோமாதாரிகளுக்கும் பட்டங்களும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன், 348 வெளிவாரிப்பட்டதாரிகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டு பட்டங்கள் உறுதிப் படுத்தப்படவுமுள்ளன என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ம)

## சர்வதேசத்து...

மான சிறிகொதாவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக் கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## யாழில் இளை...

வாள்வெட்டுக்கு இலக்கான வரை கல்வியங்காடு பகுதியில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமாக உள்ள வாய்க்கால் பகுதியில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் வெட்டுக் காயங்களுடன் முச்சக்கரவண்டியில் வந்தவர்கள் வீசியதாக அதனைக் கண்ட அப்பகுதியிலுள்ளவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் அந்த நபரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

26 வயதுடைய அஜித் என் இளைஞரே வெட்டுக் கரயஙகளுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் வியாபாரத்தினால் ஏற்பட்ட முறுகல் நிலையினால், மற்றைய குழுவினர் கொலை செய்திருக்கலாமென பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் உயிரிழந்தவரின் நண்பர்கள் என கூறப்படுபவர்கள் பிறிதொரு இடத்திற்கு வாள் வெட்டை மேற்கொள்ளச் சென்ற போது, யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும் கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-101)

## ஏழு மாவட்டங்களுக்கு சிவப்பு...

காணப்படும் மழையுடனான வானிலையில் இன்று இரவிலிருந்து அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்றுப் பிற்பகல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்திலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 1 மணிக்குப்பின் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, நுவரெலியா, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் சில இடங்களில் 150 மி.மீக்கும் அதிகமான மிகப் பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் மாத்தளை, கண்டி, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் (அனுராதபுரம், பொலன்னறுவை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு) சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும், குறிப்பாக வடமேல், தென், மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் ஏழு மாவட்டங்களுக்கு நேற்று பிற்பகல் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 811
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,333,565/-
வெற்றி இலக்கங்கள் 13 43 62 75 ஆங்கில எழுத்து J

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3270 திகதி: 2019.12.04
வெற்றி இலக்கங்கள் 16 59 61 68 ஆங்கில எழுத்து Z
சுப்பர் தவுலவ 9799
அடுத்த டிக்கட்டிழுப்பு ஜக்பொட் 31,038,485/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04/12/2019 வெற்றி வாரம் 2697 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் கடகம் 17 38 55 57
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,808,824
2019/12/05 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 302
சீட்டிழுப்பு திகதி 04.12.2019 நீலம்
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 06 17 32 விதி எண் 8
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.47,911,476
2019.12.06 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2320
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 34 59 66 67

தன நிதானய
திகதி - 2019.12.04
சீட்டிழுப்பு இலக்கம் - 234
O 18 34 35 81

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 997
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 8 1 8 5 4 6

மெகா பவர்
திகதி 2019/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 467
N 08 28 43 45 46

**வேலைக்கு ஆள் தேவை**


தோட்ட வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. (நாட் கூலி) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இடம்: நெல்லியடி அருகாமை

தொடர்பு:- (C-8411)

**076 714 8059**


# பங்களாதேஷ், நியூசிலாந்து, கனடா உயர்ஸ்தானிகருடன் மகிந்த சந்திப்பு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை மூன்று உயர்ஸ்தானிகர்கள் நேற்று அலரிமாளிகையில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்படி, இலங்கைக்கான பங்களாதேஷ உயர்ஸ்தானிகர் ரியாஸ் ஹமிதுல்லா பிரதமரை நேற்று முற்பகல் சந்தித்தார்.

இதன்போது இரு தரப்பு வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிம்ஸ்டெக் அமைப்பை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, இலங்கையின் புதிய பிரதமருக்கு தமது நாட்டு பிரதமரான ஷிக் ஹசீனா வின் வாழ்த்துச் செய்தியையும் தெரிவித்தார்.

இதனையடுத்து, இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் ஜோஹெனா கெம்ப்பர்ஸ், பிரதமர் மகிநத ராஜபக்ஷவை நேற்று சந்தித்தார்.

குறித்த சந்திப்பினபோது, பால்மா உற் பத்தி மற்றும் கால்நடை தொழிலில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினொன், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்ததோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலடு, தற்போதைய அரசியல் நிலைமை, கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடரபில் விரிவாக ஆராயப்பட்டதாக பிரதமர் அலுவலக ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு அண்மையாக வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- (இ)

**077 024 5782**



**KBK CENTRE**

கந்தர்மடம். | கொழும்புத்துறை

**Mr. K. BALAKAJEN**

B.COM(Jaf),H.N.Dip-in.Acc (ATI), Dip-in.Edu (Ousl) M.com (Hons) Acc.Spl

தரம் 10, O/L 2020

வணிகக்கல்வியும் கணக்கீடும்

(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)

ஆரம்பம்:- 06.12.2019 வெள்ளி 6 மணி

கணக்கீடு

A/L 2020, A/L 2021 புதிய பிரிவுகள்

ஆரம்பம்:- 07.12.2019 சனி 2 மணி (1318)

0750775660, 0765655956



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (C-8115)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1372)



**Techno World**

தொழில்நுட்பப் பிரிவு

A/L 2020 Day Class

ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம் (C-8415)

06.12.2019 வெள்ளிக்கிழமை காலை 8.30

077 017 5346, 077 170 3549

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.



**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)


# மரண அறிவித்தல்



ஆதிவைரவர் வீதி,
மண்டைதீவு - 6.

## திருமதி புவனேஸ்வரி சதாசிவலிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1939.07.06 | 2019.12.02 |

மண்டைதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சதாசிவலிங்கம் 02.12.2019 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (முத்துலிங்கம்) சதாசிவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுதாகர் (லண்டன்) சுஜாதா (லண்டன்), கவிதா (பிரான்ஸ்), திவாகர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவகி (லண்டன்), சண்முகதாஸ் (லண்டன்), குமரகுருபரன் (பிரான்ஸ்), நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வியாழாச்சி, லக்சுமி, மாரிமுத்து கனகம்மா, விக்கினராஜா, கண்மணி மற்றும் சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் கனகலிங்கம் காலஞ்சென்றவர்களான நாகலட்சுமி, இராசலிங்கம், சுந்தரலிங்கம், பழனித்துரை, குமாரசாமி, சிவசம்பு மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரவீன், பிரசாயி, காருண்யா, அபிராம், ஜனகா, சாயித்தியா, தனுசன், வர்மிஜன், பிரித்திகா, சயீசன், தரணிகா, அர்ச்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2019) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொ.பே:- 021 221 4732, 077 524 8549

(1378)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.